பக்கங்கள் 8

# ஈழநாடு
The EELANAADU

50 சதம்

மலர் 22 | மாசி 30 | ரபி-ஆகி 25 | இதழ் 30

யாழ்ப்பாணம் | வியாழக்கிழமை | 13-3-80

UNIVERSITY OF SRI LANKA JAFFNA CAMPUS
RECEIVED 1980-3-13
PERIODICALS DIVISION
LIBRARY

கூட்டுத்தாபனங்கள் அனுமதியின்றி

# விலை அதிகரிப்பு செய்ய முடியாது

## மந்திரி சபை முடிவு

(கொழும்பு)

தேசிய விலை நிர்ணய ஆணைக்குழுவின் அனுமதி பெறுமல் கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் பொருட்களின் விலைகளை அதிகரிக்க முடியாது.

நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இதுவரைகாலமும் தனியார் நிறுவனங்களுக்கு மாத்திரமே இந்தக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருந்தது.

### கொழும்பில் மின்சார ரயில்

கொழும்பிலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் ரயில் சேவைகளை மின்சார மயமாக்குவது பற்றி அமைச்சரவை ஆலோசனை செய்தது.

இதுபற்றி பிரஞ்சு நிறுவனம் ஒன்று ஏற்கனவே செய்துள்ள ஆலோசனைகளை ஆராய்வதென்றும் முடிவு செய்யப்பட்டது.

அரசாங்க ஊழியர்கள் வெளிநாடுகளில் 5 வருடகாலம் சம்பளமில்லாமல் பயிற்சிக்காக அல்லது மேற்படிப்புக்காகச் செய்வதற்கு அனுமதிப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

### தேசியக் கலாச்சாரக் கொள்கை

தேசியக் கலாச்சாரக் கொள்கையொன்றை வகுப்பதென்று கலாச்சார அமைச்சு முடிவு செய்துள்ளது.

ஏனைய நாடுகளில் தேசியக் கலாச்சாரக் கொள்கையொன்று இல்லாமையால் கலாச்சார விஷயங்களில் சந்தர்ப்பத்துக்கு ஏற்றுற்போல் முடிவுகள் எடுக்கவேண்டியிருப்பதாகவும், எனவே கலாச்சாரக் கொள்கையொன்று வகுக்கப்படுவது அவசியம் என்றும் அமைச்சு கருதியிருக்கிறது. (ம)

றொடீஷியா!

## கலப்பு அரசின் அமைச்சரவை

சாலிஸ்பரி, மார்ச் 12

றொடீஷியப் பிரதமர் திரு. றொபேர்ட் முகாபே தமது கலப்பு அரசு அமைச்சரவை உறுப்பினர்களின் பெயர்களை கவர்னரிடம் சமர்ப்பித்தார்.

இந்த அமைச்சரவையில் திரு. முகாபேயின் தேசியக் கட்சியைச் சேர்ந்த 16 பேரும் திரு. ஜே சுவா என் கோமாவின் தேசாபிமான முன்னணியைச் சேர்ந்த நால்வரும் வெள்ளையர் இருவரும் அங்கம் வகிக்கின்றனர்.

திரு. என் கோமாவுக்கு உள்துறை அமைச்சும் வெள்ளையர்களான திரு. நோர்மனுக்கு விவசாயத்துறையும் திரு. எட்வர்ட்டுக்கு வர்த்தகத் தொழில்துறை அமைச்சும் வழங்கப்பட்டுள்ளது.

தேசபக்த முன்னணிக்கு இரு துணை அமைச்சர் பதவிகளும் வழங்கப்பட்டுள்ளன. (இ)

### தெ. ஆபிரிக்காவுடன் நெருங்கிய உறவு

(சாலிஸ்பரி)

றொடீஷிய அரசாங்கம் தென்னுபிரிக்காவுடன் அதிக நெருக்கமான உறவை ஏற்படுத்திக்கொள்ளும் என்று புதிய பிரதம மந்திரி றொபர்ட் முகாபே அறிவித்துள்ளார்.

பூகோளரீதியாகவும் வேறு வகையிலும் இருநாடுகளுக்குமிடையில் உறவு இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இனஒதுக்கலைத் தாம் எதிர்த்த போதிலும் தெனிஞபிரிக்காவுடன் நெருங்கிய தொடர்பைதாம்விரும்புவதாக அவர் தெரிவித்துள்ளார்.

## யாழ். நகரில் திருடப்பட்ட சைக்கிள் கைதடியில்விற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் திருடிய சைக்கிள் ஒன்று கைதடியில் விற்கப்பட்டதாம். இவ்வாறு விற்கப்பட்ட சைக்கிளை கைப்பற்றியுள்ள பொலிசார் சைக்கிளை விற்றவர்களில் ஒருவரெனக் கருதப்படும் நபரையும் கைது செய்துள்ளனர்.

சைக்கிள் திருட்டு சம்பந்தமாக யாழ். கே. கே. எஸ். வீதியில் வசிக்கும் கே.ராமேஸ்வரன் என்பவர் யாழ். பொலிசில் செய்துள்ள புகாரில் கடந்த திங்கட்கிழமை இரவு யாழ். சலுசலாவுக்குப் பின்னுல் உள்ள வீட்டில் சைக்கிளை வைத்து விட்டுப் படுத்துவிட்டதாகவும் இரவு 3 மணி வரை சைக்கிள் வைத்த இடத்தில் இருந்தது. விடிந்து எழுந்து பார்த்த போது சைக்கிளைக்காணவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

புலன்விசாரணையில் ஈடுபட்ட யாழ். பொலிஸ் நிலைய இன்ஸ்பெக்டர் திரு எஸ். எஸ். திருச்சிற்றம்பலம் மேற்படி சைக்கிளை கைதடி வடக்கிலுள்ள பூபாலசிங்கம் என்பவரிடமிருந்து கைப்பற்றியதுடன் அவரை விசாரணைக்குட்படுத்தியபோது நேற்றுமுன்தினம்

[8ம் பக்கம் பார்க்க]

### லண்டன் பயணமானுர்

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் 27, 28-ம் திகதிகளில் லண்டனில் நடைபெறவுள்ள சர்வதேச கூட்டுறவு மகளிர் கமிட்டி மகாநாட்டில் கலந்துகொள்வதற்காக இலங்கை கூட்டுறவு மகளிர் கமிட்டியின் உபதலைவியும், வடபிரதேச மகளிர் கமிட்டியின் தலைவியுமான வலிகிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கப் பிரதிநிதியுமாகிய திருமதி வேதவல்லி கந்தையா லண்டன் பயணமானுர்.

மூன்று மாத கால சுற்றுலாவை மேற்கொண்டு யூனெஸ்கோ மகளிர் கூட்டுறவுச் சபையின் ஆதரவில் செல்லும் இவர், ஹங்கேரி, டென்மார்க், லண்டன் ஆகிய நாடுகளில் நடைபெறும் மகாநாடுகளிலும் உகண்டா, தன்

[8ம் பக்கம் பார்க்க]

கந்தப்போடியின் மரணத்துக்கு

# நெஞ்சில் விழுந்த சூடுதான் காரணம்

## சட்டவைத்திய அதிகாரி சாட்சியம்

[மட்டக்களப்பு]

"நெஞ்சில் விழுந்த துப்பாக்கிக் குண்டுகளினுல்தான் கந்தப்போடி இறந்திருக்க முடியும்" பிரபலகேடி கந்தப்போடியின் மரணம் குறித்து நேற்று புதன்கிழமை நடைபெற்ற மரண விசாரணையில் மட்டக்களப்பு சட்டவைத்திய அதிகாரி திரு. ஆர். பஞ்சலிங்கம், மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி திரு. தி. சுந்தரலிங்கம் முன்னிலையில் இவ்வாறு தெரிவித்தார்.

கந்தப்போடி கடந்த மாதம் 24ந் திகதி கல்லாவெளி பொலிஸ் பகுதியில் பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானுர்.

"கந்தப்போடி தொடையில் விழுந்த துப்பாக்கிச் சூட்டினுல் இறந்திருக்கமுடியாது. நெஞ்சில்விழுந்த துப்பாக்கிச் சூட்டினுல்தான் மரணம்நிகழ்ந்திருக்கிறது. இரண்டாவது சூடுதான் நெஞ்சில் விழுந்திருக்கிறது என்று கல்லாவெளி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. என். கமலேஸ்வரன் தமது சாட்சியத்தில் கூறினுர். பொலிஸ் கான்ஸ்டபிள் என். பெர்ஞண்டோ மற்றும் பொதுமக்களான திருமதி உலகநாதன் தெய்வானை(வயது 55), மகேஸ்வரன் சிவராசா (55), மாணிக்கம் ஆறுமுகம் (60) ஆகியோரும் சாட்சியமளித்தனர்.

பொலிசாருக்குமாருகச்சாட்சியமளித்த பொதுமக்களுக்கு எந்தவகையிலும் பங்கம் ஏற்படுத்தக்கூடாதென்று பொலிசாருக்கு நீதவான் திரு தி. சுந்தரலிங்கம் உத்தரவிட்டுள்ளார்.

எதிர்வரும் 17ந் திகதி தீர்ப்பு வழங்கப்படும். (மட். நிரு)

## இப்படியும் ஒரு சோதனை!

(யாழ்ப்பாணம்)

கச்சதீவு உற்சவத்தின்போது அங்கு சோடா வியாபாரம் செய்து பணம் சம்பாதிக்கலாம் என்று சென்ற குடும்பமொன்று தமது தங்க நகைகளையும் 2 ஆயிரம் ரூபா ரொக்கப் பணத்தையும் களவு கொடுத்துவிட்டுப் பரிதாபமான நிலையில் ஊர் திரும்பியது.

யாழ்ப்பாணம் [மானிப்பாய் வீதியைச் சேர்ந்த அழகரத்தினம் உதயகுமாரும் அவரது மனைவியும் சோடா வியாபாரம்] செய்வதற்காகக் கச்சதீவு சென்றனராம். கச்சதீவு உற்சவத்தின் இறுதி நாளன்று மனைவி அணிந்திருந்த தங்கத் தாலிக்கொடியையும், கணவனதும் மனைவியினதும் இரு கைக்கடிகாரங்களையும் வியாபாரம் செய்து வைத்திருந்த 2 ஆயிரம் ரூபா ரொக்கப் பணத்தையும் தகரம் ஒன்றுக்குள் போட்டு அடைத்து வைத்துவிட்டு மும்முரமாக வியாபாரத்தைக் கவனித்துக்கொண்டிருந்தனராம். வியாபாரம் முடிவடைந்ததும் தாங்கள் வைத்த இடத்தில் தங்களின் பொருட்களைக் காணவில்லை எனவும், பொருட்களின் பெறுமதி சுமார் 15 ஆயிரம் ரூபா இருக்குமெனவும் அழகரத்தினம் உதயகுமார் பொலிசில் புகார் செய்துள்ளார்.

இத்திருட்டு சம்பந்தமாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. (கொ)

புளியம்பழம் பறிக்க ஏறிய சிறுவன்

## மரத்திலிருந்து விழுந்து பரிதாப மரணம்

[யாழ்ப்பாணம்]

பாடசாலை மாணவன் ஒருவன் மரத்திலிருந்து விழுந்து மரணமான பரிதாப சம்பவம் ஒன்றுகரம்பனில் நிகழ்ந்தது.

பருத்தியடைப்பைச் சேர்ந்த மாணிக்கராசா கோகுலன் (12 வயது) என்பவரே இவ்வாறு மரத்திலிருந்து விழுந்து மரணமானவராவார்.

இவரது மரண விசாரணை யாழ். ஆஸ்பத்திரியில் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். அமிர்தலிங்கம் முன்னிலையில் நடைபெற்றது. மரணமானவரின் தாய் மாணிக்கராசா சரஸ்வதி சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

"நானும் எனது மகள் ரகுச்செல்வியும் (9 வயது) மரணமான எனது மகன் கோகுலனும் பருத்தியடைப்பிலிருந்து கரம்பனில்உள்ள குளத்திற்குக் குளிப்பதற்காகச் சென்றேம். நானும் எனது மகளும் குளித்துக்கொண்டிருக்கும் போது மரணமான எனது மகன் குளித்துவிட்டு வெளியேறினுர். பின் எமக்குமுன் வீட்டுப்போவதாகக் கூறிவிட்டுச் சென்றுவிட்டார்.

வீட்டுக்குச்செல்லும்வழியில் புளியமரம் ஒன்றிருக்கிறது. அப்புளிய மரத்தில் ஏறிப் புளியங்காய் பிடுங்கித் தின்றுகொண்டிருக்கிம் போது அவ்வழியால் எனது மற்ற மகன் ராகுலன் வந்தார் அப்போது தம்பியார் மரத்தில் இருப்பதைக்கண்டு இறங்கும்படி கூறினுர். அந்நேரத்தில் குளித்துமுடிந்து நானும் மகளும் புளியமரத்தடிக்கு வந்து விட்டோம் புளியங்காய் ஆய்ந்து கொண்டிருந்த எனது மகன் மரத்தில் இருந்து தவறி விழுந்ததைக் கண்டாராம்.

கார் ஒன்றைப் பிடித்து வரை ஊர்காவற்

[8ம் பக்கம் பார்க்க]

### வேலணை வட்டார உடற் பயிற்சிப் போட்டி

(வேலணை)

வேலணைக் கல்வி வட்டாரப் பாடசாலைகளுக் கிடையிலான உடற்பயிற்சிப் போட்டிஇன்று புதன்கிழமை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவிருக்கின்றது.

இவ்வுடற் பயிற்சிப் போட்டியில் வேலணை கல்விவட்டாரத்தைச்சேர்ந்த 34 பாடசாலைகள் பங்கு பற்ற விருக்கின்றன. (௩

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல இனமுந்திரிகை [Grapes] கன்றுகள் விற்பனைக்குண்டு விபரங்களுக்கு: அண்ணா பாம், இணுவில். 5206

## தேவை

யாழ்ப்பாணத்தில் ஓர் வியாபார ஸ்தாபனத்திற்கு, தட்டெழுத்து, கணக்கியல் பொருட்கள் இருப்பு கணக்கு போன்றவற்றில் முன் அனுபவமும் ஜி. சி. ஈ. (சாதாரணம்) சித்தி அடைந்த திருமணமாகாத பெண்பாலாரிடமிருந்தும், வியாபார அறிவாற்றலும், ஜி. சி. ஈ. (சாதாரணம்) சித்தியடைந்த நல்லொழுக்கமுள்ள ஆண்பாலாரிடமிருந்தும் கிளார்க், கவுண்டர் கிளார்க் பதவிகளுக்கும், 22 வயதிற்குட்பட்ட வேலை பழக விரும்பும் இளைஞர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் 20-3-80 முன்னர் கோரப்படுகின்றன. விளம்பர இல: 5199 C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 5199

## வாடகைக்கு

திருநெல்வேலி தெற்கிலுள்ள நாலு அறை வீடு இருநபர் கொண்ட இரு குடும்பத்தினருக்குக் கொடுக்கப்படும். 8, தபாற்கந்தோர் வீதி, 5205

## அறிவித்தல்

மின் சக்தியைக் கட்டுப்படுத்திப் பாவிக்கும்படி இலங்கை மின்சார சபையால் கேட்டுக்கொண்டதற்கிணங்க, கொக்குவில் கிராமசபையின் மின்சக்தி பெறும் மின்பாவனையாளர்கள் தங்கள் மின்சக்திப் பாவனையைக் கட்டுப்படுத்தும்படியும் 50 அலகுகளுக்கு மேற்பட உபயோகிக்கும் அலகுகளுக்கு புதிய கட்டணவிகிதம் நடைமுறைப்படுத்த இருப்பதையும் கிராமசபை எல்லைக்குளுள்ள மின் பாவனையாளர்களுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத் தருகிறேன்.

**க. சபாபதிப்பிள்ளை,**
விசேட ஆணையாளர்,
கொக்குவில் கிராமசபை.

கிராமசபை அலுவலகம்,
கொக்குவில்,
11-03-1980 5208

## வகுப்புகள்

G. C. E. சாதாரண வகுப்பு ஆங்கில இலக்கண இலக்கியம் (English Literature) ஆங்கிலப் பேச்சு (Spoken English) கனிப்பட்ட முறையாயும், வீடுகள் சென்றும் கற்றுக் கொடுக்கப்படும். தொடர்பு: விளம்பர இல:5164, மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். 5164

## சங்கானைப் பட்டினசபையின் மின் பாவனையாளருக்கான முக்கிய அறிவித்தல்

சங்கானைப் பட்டினசபை மூலம் மின்சாரம் பெறுபவர்களுக்கு கீழ்வரும் விடயத்தை அறியத்தருகின்றேன்.

31-1-78ந் திகதிக்குப் பின்னர் வீட்டு மின்பாவனையாளரால் பாவித்த மின் அலகுகளில் 50க்கு மேற்பட்ட மின் அலகுகள் ஒவ்வொன்றிற்கும் -/50 சதத்திற்கு குறையாமல் கட்டணம் அதிகரிக்கப்படும் என்பதையும்,

தொழிற் ஸ்தாபனம் உட்பட மற்றைய எல்லாவிதமான மின் பாவனையாளரின் மின் கட்டணம், அவர்களால் சாதாரணமாகப் பாவிக்கப்பட்ட நுகர்ச்சியிலும் பார்க்க 75 சதத்திற்கு அப்பாற்படும் ஒவ்வொரு மின் அலகுகளுக்கும் 1-42 சதத்திற்கு குறையாமல் கட்டணம் அதிகரிக்கப்படும் என்பதனையும் இவ்வதிகரிப்பு பிரதான மின்சாரப் பரிசோதகரின் அனுமதி கிடைத்ததின் பின்னர் கட்டணம் அறவிட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை முன்கூட்டியே அறிவித்துக் கொள்ளுகின்றேன்.

**இராசா தணிகாசலம்,**
விசேட ஆணையாளர்,
சங்கானைப்பட்டணம்.

விசேட ஆணையாளர்
அலுவலகம்,
சங்கானைப்பட்டணம்,
சங்கானை,
10-3-1980. 5207

## கே. ஜி. எக்ஸ்பிரெஸ் பஸ் சேவை

சாயக்கூடிய, வசதியான, ஆடம்பரமான பஸ்கள் தினசரி கீழ்க்கண்ட இடங்களிலிருந்து புறப்படும்:

**கொழும்பு / யாழ்ப்பாணம்**

வெள்ளவத்தை மாணிக்க விநாயகர் கோவிலடி
லோரன்ஸ் ரோட் — இரவு 7-30 மணி
கோட்டை புகையிரத நிலையம் — இரவு 8-00 மணி

**யாழ்ப்பாணம் / கொழும்பு**

வெலிங்டன் தியேட்டர், யாழ்ப்பாணம் இரவு 8-00 மணி
முன்பதிவு செய்யும் இடங்கள்:
இராஜேஸ்வரி ஹோட்டல்,
69, நொறிஸ் ரோட், கோட்டை.
தொலைபேசி: 25939 பிற்பகல் 2-00 மணிமுதல் இரவு 7-00 மணிவரை
பிளாசா தியேட்டர், வெள்ளவத்தை.
தொலைபேசி: 88070 பிற்பகல் 1-30 மணிமுதல் இரவு 10-00 மணிவரை
காமினி தியேட்டர், மருதானை.
தொலைபேசி: 93810 காலை 9-00 மணிமுதல் இரவு 10-00 மணிவரை
வெலிங்டன் தியேட்டர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 559 காலை 8-00 மணிமுதல் இரவு 10-00 மணிவரை

**கட்டணம் ரூ. 50/- (ஒரு வழி மட்டும்)**

பயணம் செய்யும் போது பணத்தை உங்களுடன் எடுத்துச் செல்லவேண்டியதில்லை. கீழ் குறிப்பிட்ட இடங்களில் உங்கள் பணத்தை ஒப்படைக்கவோ பெற்றுக் கொள்ளவோ முடியும்

★ பிளாஸா தியேட்டரில் ரூபா 1000/-க்கு உட்பட்ட தொகை ஒப்படைக்கவோ அல்லதுபெற்றுக் கொள்ளவோ முடியும்

**கே. ஜி. இன்டஸ்ரீஸ்,**
ஸ்ரீ சங்கராஜமாவத்தை,
கொழும்பு.
**வெலிங்டன் தியேட்டர்,**
யாழ்ப்பாணம்

எத்தொகையும் ஒப்படைக்கவோ பெற்றுக்கொள்ளவோ முடியும்

★ காலை 6 மணிக்கு பஸ்கள் கொழும்பு/யாழ்ப்பாணம் சென்றடையும் 5133

## குடிநீர்த்திட்ட வேலைகள்

[நெல்லியடி]

வாதரவத்தை குடிநீர்த் திட்ட அமைப்பு வேலைகள் பூர்த்தியடையும் தறுவாயில் உள்ளன

புத்தூர் அன்னசத்திரம் கிணற்றிலிருந்து வாதரவத்தை கிராமத்திற்கு நீர் வழங்கும் வேலைகளை தேசிய நீர்வழங்கற் சபை மேற் கொண்டு வருகிறது. சித்திரைபுதுவருடப் பிறப்புடன் பொதுமக்களுக்கு நீர் விநியோகம் ஆரம்பிக்கப் படலாம் என்றுஎதிர்பார்க்கப் படுகின்றது.

## பால வேலைகள் மீண்டும் ஆரம்பம்

(நெல்லியடி)

அச்சுவேலி கிராமசபைக் குட்பட்ட கொன்னையன்துரவு பாலவேலைகளை பூர்த்திசெய்ய மேலும் 19.500 ரூபாவை கோப்பாய் பாராளுமன்ற உறுப்பினர் திரு, சி. கதிரவேற்பிள்ளை பன்முகப் படுத்தப்பட்ட நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யசிபார்சு செய்துள்ளார்.

இப் பால வேலைகள் கடந்த ஆண்டு ஆரம்பிக் கப்பட்டு இடை நிறுத்தம் செய்யப் பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## [illegible] இடமாற்றம்

(பண்டத்தரிப்பு)

யாழ்ப்பாணம் அரசாங்க செயலக உணவுக் கட்டுப் பாட்டுப் பகுதி பிரதம எழுதுவினைஞராக கடமையாற்றிய திரு. வி. சண்முகம் சண்டிலிப் பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு உத்தியோகத்தராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (கு)

## கடனுதவி

(புளியங்குளம்)

புளியங்குளம் கிராம அபிவிருத்திச் சங்கம் தனது அங்கத்தவர்களுக்குசிறு கைத்தொழில் முயற்சிகளுக்காக750 ரூபாவை கடனாக வழங்கவுள்ளது. இதற்கென கிறீஸ்தவ சர்வதேச இயக்கம். கால் நடைவளர்த்தல் கோழிவளர்த்தல். செங்கட்டி உற்பத்தி கடதாசிப்பூக்கள் செய்தல் மரவேலை போன்ற வேலைகளில் ஈடுபடும் கிராமப்புற இளைஞர்களை ஊக்குவிக்க எவ்வித நிபந்தனையுமின்றி கிராம அபிவிருத்திச் சங்கத்தினூடாகஇப்பணத்தை வழங்க நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளது.

## தன் ஓட்டத்தில் வெற்றி பெற்றனர்

(பண்டத்தரிப்பு)

யாழ்ப்பாணம் முஸ்லிம் வீதி கற்குளம் சன சமூக நிலையத்தின் 7 வது ஆண்டு நிறைவு விழாவைமுன்னிட்டுநடாத்தப்பட்ட 6 மைல் மரதன் ஓட்டப் போட்டியில் பண்டத்தரிப்பைச் சேர்ந்த திரு'எஸ். சந்திலால், திரு. பொ. கனககுலசிங்கம். திரு எஸ். சி. இராசநாயகம் ஆகிய மூவரும் முறையே முதலாம், இரண்டாம் மூன்றும் இடங்களைப் பெற்றனர். (அ

## சாந்தையில் 50 வீடுகள்

(பண்டத்தரிப்பு)

சில்லாலையிலுள்ள சாந்தைப் பகுதியில் சுயஉதவி வீடமைப்புத் திட்டத்தின் கீழ்50வீடுகளை நிறுவுவதற்கு யாழ். தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை மேற் கொண்டுள்ளது. (அ)

## பொருட்காட்சி

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் இந்துக்கல் லூரியின் செயல் திட்ட பொருட்காட்சியும் கண்காட்சியும் [illegible]

## "மல்லாவி கனிஷ்ட வித்தியாலயம் இவ்வருடம் தரமுயரும்"

(புளியங்குளம்)

"மல்லாவி கனிஷ்ட வித்தியாலயம் இவ்வருட இறுதிக்குள் மத்திய மகாவித்தியாலயமாகத் தரமுயரவுள்ளது என்று வவனியா கல்வி அதிகாரி திரு வே. கந்தசாமி, இல்லங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டியின் போது குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் 'முல்லைத்தீவு மாவட்டத்தில் இரண்டு பாடசாலைகளை மத்திய மகாவித்தியாலயமாகத் தரமுயர்த்துவதற்கு சிபார்சு செய்யுமாறு கல்வி அமைச்சு எம்மைப் பணித்துள்ளது முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியும், மல்லாவி கனிஷ்ட வித்தியாலயமும் சிபார்சு செய்யப்பட்டுள்ளது, இவ்வருடம் இப் பாடசாலையில் க. பொ. த உயர்தர கலைப்பிரிவு வகுப்புக்களை நடாத்துவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது இதனையடுத்து விடுதி வசதியுடன் விஞ்ஞானப் பிரிவையும் ஏற்படுத்தவுள்ளோம். மேலும் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான விஞ்ஞான ஆய்வு கூடத்தையும் அமைப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற் கொண்டு வருகின்றோம்" என்றுகூறினார்.

மாங்குளம் வட்டாரக் கல்வி அதிகாரி திரு மு. சிவானந்தன் பேசுகையில்; "அரசினரால், பின்தங்கிய பிரதேசமெனக் கருதப்பட்ட இப்பகுதிப்பாடசாலைகள் நகர்புறப் பாடசாலைகளுடன் கல்வி விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றியீட்டி வருகின்றது. இதற்கு பெற்றோர்களும், நலன்விரும்பிகளும் காட்டும் அக்கறைதான காரணமாகும். மாணவர்கள் புத்தகத்திலிருந்து அறிவை வளர்த்தால் மாத்திரம் வாழ்க்கைக்குப் போதாது அவர்கள் இப்படியான புற முயற்சிகளில் ஈடுபட்டு நன் மனப்பாங்குகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்" என்றார்.

பாடசாலை அதிபர் திரு. செ. மயில்வாகனம் நன்றியுரை கூறினார்.

## நாளை நடைபெறும் கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கருத்தரங்கு நாளை மாலை 6-30 மணிக்கு கொழும்புத் துறையிலுள்ள வளன்புரம் என்னுமிடத்தில் திரு. ஈழவேந்தன் தலைமையில்நடைபெறும்.

"தமிழனின் இன்றைய நிலையும், தமிழ் ஈழத்தின் எதிர் காலமும்" என்னும் பொருள் பற்றி இக்கருத்தரங்கு அமையும்.

யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன். கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை, மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம், திரு. வண்ணை ஆனந்தன், திரு. கோவை மகேசன், யாழ். நகர முதல்வர் திரு. இராசா விசுவநாதன், திரு. மாவை சேனாதிராசா ஆகியோர் உட்பட வேறுபலரும் இக்கருத்தரங்கில் உரையாற்றவுள்ளனர். [வெ]

## மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் வாய்ப்புக்கள்

TECHNICIANES [Cable Jointers]
CARPENTERS
HOUSE MAIDS

[a] சான்றிதழ் பிரதிகள்
[b] பாஸ்போட் பிரதி — 2
[c] புகைப்படம் — 3

மேற்கூறிய வேலைவாய்ப்புகளுக்கு தகுதியும் திறமையும் உள்ளவர்கள் தபால் மூலம் விண்ணப்பத்தை அனுப்பி வைக்கவும்.

**கவனத்திற்கு: நேரடித் தொடர்பு இல்லை.**

அனுப்பவேண்டிய கடைசித் திகதி:
**18-3-1980**

அனுப்பவேண்டிய முகவரி:
**நாதன் ட்ரவல் ஏஜென்ஸி**
182, ஆஸ்பத்திரி வீதி, - யாழ்ப்பாணம்.
Labour Licence No: 359. 5210

## வடபகுதி மக்களுக்கோர் அரிய சந்தர்ப்பம்!

**இயேசு ஜீவிக்கிறார்,**
**சுகமளிக்கும் சுவிஷேசக் கூட்டம்**

காலம்: 14, 15, 16, மார்ச்சு 1980
தினமும் மாலை 5-30 மணி,

இடம்: றெட்றிக்கோ மைதானம், கிளிநொச்சி

இலண்டன், இலங்கை விசேட வைத்தியர்களால் கைவிடப்பட்டு, இயேசு கிறிஸ்துவினால் அற்புத சுகம் பெற்ற பெண் உட்பட இன்னும் அநேக உயிருள்ள சாட்சிகளும், தெய்வீகப் பாடல்களும், தேவ செய்திகளும், பிசாசின்பிடி, வியாதி, பாவக்கட்டு, பிரச்னைகள் அனைத்திற்கும் விசேட ஜெபமும் இடம்பெறும்.

கிளிநொச்சிப் பகுதி, யாழ்ப்பாணம், பருத்தித்துறை ஆகிய இடங்களுக்கும் பஸ்சேவை ஒழுங்கு செய்யப் பட்டுள்ளது.

எல்லா மதத்தினரையும் வந்து தேவ ஆசீர்வாதம் பெறுமாறு அன்போடு வரவேற்கின்றோம்.

**'இயேசு ஜீவிக்கிறார்' சுவிஷேசக் குழுவினர்,**
கிளிநொச்சி. 5192

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

ஒரு பக்தன் எப்பொழுதும்கடவுளுடன் கலந்திருக்கிறான்.
— மகாத்மாகாந்தி

## மக்கள் கருத்து

### இப்படியும் ஊழியர்கள்!

1-3-80 அன்று 29 ஸ்ரீ 316 இலக்க பஸ் மாலை 3-15 மணியளவில் முல்லைத்தீவில் இருந்து சாவகச்சேரி நகருக்குப் புறப்பட்டு வரும்போது முல்லைத்தீவு வித்தியானந்தாக்கல்லூரிக்கருகாமையில் பஸ்ஸில் ஏற்பட்ட கோளாறு காரணமாக மீண்டும் முல்லைத்தீவுச் சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு பின் அதனைச் சரிபார்த்துச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டது.

பிரஸ்தாப பஸ்ஸில் முல்லைத் தீவுச் சாலை அதிபரும் பிரயாணத்தில் ஈடுபட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இரவு 10-30 மணிக்கு பஸ் யாழ்ப்பாணம் வந்தடைந்தது. அந்நேரம் யாழ். நகரே வெறிச்சோடிக்கிடந்தது. இந்நிலைமையில் சாரதி, நடத்துநர், முல்லைத்தீவுச் சாலை அதிபர் ஆகியோரின் விடாமுயற்சியால் பிரயாணிகள் எல்லோரும் அவர்களது வீட்டிற்குக் கொண்டுபோய் விடப்பட்டார்கள்,

இந்த உத்தியோகத்தர்கள் பிரயாணிகளின் நன்மை கருதிச் சேவையில் ஈடுபட்டமைக்கு அவர்களுக்கும் வட பிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

திருமதி அமுதாரவிந்திரன்
முல்லைத்தீவு.

# "தோட்டப் பாடசாலை ஆசிரியர்கள் மீது பாகுபாடு காட்டக்கூடாது!"

## இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் மகஜர்

(கொழும்பு)

தோட்டப்பாடசாலை ஆசிரியர்களை மற்ற அரசாங்கப் பாடசாலை ஆசிரியர்களிலிருந்து பாகுபாடு காட்டுவது கூடாது" என்று இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க தூதுக்குழு இன்று கல்வி அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்காவைச் சந்தித்து கோரவிருக்கிறது.

தலைவர் திரு. டி. எள். கே. வணசிங்கா தலைமையில் பொதுச்செயலாளர் த. மகாசிவம், நிதிச்செயலாளர் நா. நடராசா, நிர்வாகச் செயலாளர் நா. சோதிநாதன், சிரேஷ்ட துணைப்பொதுச்செயலாளர் த. பஞ்சலிங்கம் ஆகியோரடங்கிய இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க தூதுக்குழு, பிரதிக்கல்வி மா அதிபர் திரு. ஜோர்ஜ்மெண்டிஸையும், தோட்டப் பாடசாலைகளுக்குப் பொறுப்பான பிரதம கல்வியதிகாரி திரு. என். ஆர். பாலசிங்கம், கல்வி அதிகாரி திரு. சங்கையாவையும் சந்தித்து, 1977 ஜூன் மாதத்தில் நடைபெற்ற தோட்டப்பாடசாலைகளின் சுவீகரிப்பிலுள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி, அவற்றை நிவர்த்திசெய்ய உடன்நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், சமீபத்தில் தோட்டப்பாடசாலைகள் சுவீகரிக்கும்போது இத்தகைய குறைபாடுகள் ஏற்படாது இருப்பதற்குகவனம் செலுத்துமாறும் வற்புறுத்த இருக்கின்றனர்.

இத்தூதுக்குழு கல்வி அமைச்சரிடம் சமர்ப்பிக்க இருக்கும் மகஜரில், பின்வரும் முக்கிய குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

"தோட்டப்பாடசாலை ஆசிரியர்கள் ஏனைய அரச ஊழியர்களைப்போல் பல சந்தர்ப்பங்களில் கணிக்கப்படுவதில்லை. உதாரணமாக 1980ம் ஆண்டு இடமாற்றத்திட்டத்தில் இவ் ஆசிரியர்களுக்குஆசிரிய பயிற்சி முடிந்து வெளியேறியபோது தனியானதொரு இடமாற்றத் திட்டம் அமுல்படுத்தப்பட்டது.

"சில ஆசிரியர்களுக்கு சம்பளப்பணமாக 230 ரூபா மட்டுமே வழங்கப்படுகின்றது. ஏனையவர்களுக்கு வழங்கப்படும் விசேட பஞ்சப்படியான 245 ரூபா இவர்களுக்கு வழங்கப்படுவதில்லை

"தனியார் பாடசாலைகள் சுவீகரிக்கப்பட்டபோது அவற்றில் கடமையாற்றிய ஆசிரியர்களுக்கு, அவர்கள் பெற்ற சம்பளமே தொடர்ந்தும் வழங்கப்பட்டது. ஆனால் தோட்டப்பாடசாலைகள் சுவீகரிக்கப்பட்போது அதன் ஆசிரியர்களுக்கு திரட்டுச்சம்பளமாக 230 ரூபா மட்டுமே வழங்கப்படுகின்றது. சிலருக்கு இது தானும் வழங்கப்படுவதில்லை.

"புகையிரத ஆணைச்சீட்டுக்களைப் பொறுத்தவரையில் சில ஆசிரியர்களுக்கு மட்டுமே முறையாக மூன்று சோடிகளும் வழங்கப்படுகின்றது. சிலருக்கு 1 சோடி மட்டும் வழங்கப்படுகின்றது. சிலருக்கு ஒரு ஆணைப்பத்திரம் கூட வழங்கப்படுவதில்லை அத்தோடு சில ஆசிரியர்களுக்கு அவர்கள் குடும்ப அங்கத்தவர்களுக்கு இவ்வாணைப்பத்திரங்கள் வழங்கப்படுவதில்லை.

"ஆசிரியர் விடுதிகள் வசதிக்குறைவுகள் பல உள்ளனவா இருந்தும், சிக்கனவாடகை விதப்படி வாடகை அறவிடப்படுவதில்லை

"ஓய்வூதியம், இடமாற்றம், பதவி உயர்வுபோன்ற விடயங்களுக்கு தோட்டப்பாடசாலை சேவை கணிக்கப்படுவதில்லை

"பல ஆசிரியர்கள் இன்னமும் கடன்சபை அங்கத்தவர்களாகச் சேர்க்கப்படவில்லை.

"ஆசிரிய பயிற்சிக்குத்தெரிவு செய்யப்படும்போது பதிலாசிரியர் இல்லை என்ற காரணத்தால், பல ஆசிரியர்களுக்கு ஆசிரிய கலாசாலை அனுமதிகிடைத்தும் பயிற்சியை மேற்கொள்ள முடியாதிருக்கின்றது என்று மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(வெ)

### 'ஆத்மஜோதி' ஆசிரியருக்கு பொன்னாடை

(நாவலப்பிட்டி)

கடந்த 32 தினங்களாகஅருள்மிகு ஸ்ரீ முத்துமாரி யம்மன் தேவஸ்தானத்தில் மகாபாரதக் கதையை நிகழ்த்திய ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையாவுக்கு பிரம்மஸ்ரீ சுப்ரமணியக் குருக்கள் பொன்னாடைபோர்த்திப் பாராட்டினார்.

தேவஸ்தானத் தலைவர் திரு. பி. டி. கிருஷ்ணசாமி பூர்த்தி விழாவுக்குத் தலைமைதாங்கிப் பேசுகையில்; சிறு குழந்தைகளும் ரசிக்கும் வண்ணம் ஆத்மஜோதி ஆசிரியர் பாரதக் கதை கூறிய முறையைப் பாராட்டினார்.

இவ்விழாவில் கதிரேசன் மகாவித்தியாலய அதிபர் திரு. எஸ். வி. ஆறுமுகம், சுகாதார வைத்திய அதிகாரி திரு. எஸ். புவிராசசிங்கம், திரு. பொன். சோதிலிங்கம், செல்வன் ந. ரவி, செல்வன் து. செல்வக்குமார் ஆகியோரும் பாராட்டுரை வழங்கினர்.

### உயர்கல்விபெற ஆஸ்திரேலியா பயணமானார்

(புலோலி)

மொறட்டுவ பல்கலைக்கழக உபவிரிவுரையாளர் திரு. எஸ். கணபதிப்பிள்ளை கொழும்புத் திட்ட புலமைப்பரிசில் பெற்று உயர்கல்விக்காக அவுஸ்திரேலியா பயணமானார்.

இலங்கைப் பல்கலைக்கழக கட்டுப்பெத்தை வளாகத்தில் எந்திரவியற் பொறியியலில் பட்டம் பெற்ற இவர், புற்றளை மகாவித்தியாலயம், புலோலி ஆண்கள் மாவித்தியாலயம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் என்பனவற்றின்பழையமாணவராவர் என்பதும் புலோலியைச் சேர்ந்த காலம் சென்ற பெ. சங்கரப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திராரவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியின் பொன்விழா

(பண்டத்தரிப்பு)

யாழ்ப்பாணம் லங்கா சித்த ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியின் பொன்விழாவும், ஸ்தாபகர் நினைவுவிழாவும் இம்மாதம் 25, 26, 27ம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இவ் விழாவில் பிரதம அதிதிகளாக எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், ஆயுர்வேத ஆணையாளர் திரு. வன்னிநாயகா வட இலங்கை சித்த வைத்திய சம்மேளனத்தின் தலைவர் வைத்திய கலாநிதி எஸ். பி. ஈ. இன்னாசித்தம்பி ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

கொழும்பிலுள்ளவிஷ வைத்திய சங்கத்தின் பாம்புக்கண்காட்சி, மூலிகைக்கண்காட்சி, ஏட்டுச்சுவடிக்கண்காட்சி என்பனவும் சில்லையூர் செல்வராஜன் தலைமையில் கவியரங்கும் இப் பொன்விழாவில் முக்கிய நிகழ்ச்சிகளாக இடம்பெறவுள்ளன. இதனுடன் பொன்விழா மலர் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது.

இதற்கான ஒழுங்குகளை வட இலங்கை சுதேச வைத்திய சபையின் செயலாளரும், கல்லூரியின் உப அதிபருமான டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி, கல்லூரியின் நிர்வாக அதிகாரி டாக்டர் கே. எஸ். பரம்சோதிநாதன் ஆகியோர் துரிதமாக மேற்கொண்டு வருகின்றனர்.

......

### புதிய தேர்

(பண்டத்தரிப்பு)

பெரியவிளான் வடசேரி விநாயகர் ஆலயத்திற்கு ஒரு லட்சத்து இருபத்தையாயிரம் ரூபா செலவில் புதிய சித்திரத்தேர் அமைக்கப்பட்டுள்ளது. இப்புதிய தேரின் வெள்ளோட்டம் இம்மாதம் 30-ம் திகதியன்று நடைபெறவிருப்பதாக ஆலய தர்மகர்த்தா தெரிவித்தார். (அ)

......

### பாடசாலைக்கு மாடிக்கட்டடம்

(புலோலி)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை மாணவிகளின் வகுப்பறைப் பற்றுக்குறையை நீக்குமுகமாக சுமார் ஒருலட்ச ரூபா செலவில் புதிய வகுப்பறைகளைக்கொண்ட மாடிக்கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினத்தால் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின்கீழ் ஒதுக்கீடுசெய்யப்பட்ட பணத்தைக்கொண்டு அமைக்கப்பட்டுவரும் புதிய வகுப்பறைகளைக்கொண்ட மாடிக்கட்டிட முதற்கட்டவேலைகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளன.

### சேவைக்குப் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

"பொதுமக்களிடையே விசேஷமாக மாணவர்களிடையே பல் வைத்திய சேவையை டாக்டர் நித்தியானந்தன் நிலை நாட்டிவருவது பாராட்டுக்குரியது" என்று பல் வைத்திய நிபுணர் கி. நித்தியானந்தன் சுபாஸ் விருந்தினர் விடுதியில் அளித்த விருந்து வைபவத்தில் கலந்துகொண்டு பேசுகையில், வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகர் குறிப்பிட்டார்.

பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபைச் செயலாளர் திரு. அ. பஞ்சாட்சரம் பேசுகையில், பாடசாலைச் சிறுவர்களுக்கு டாக்டர் இலவச பற்சிகிச்சை அளிக்க முன்வந்தமை பெற்றோருக்கு மகிழ்ச்சியளிக்கும் விஷயமாகும் என்றார்.

யாழ். எம். பி. திரு. யோகேஸ்வரன், குடும்ப நீதிமன்ற நீதிபதி திரு. யேசுரத்தினம் ஆகியோர் உட்பட மற்றும் பலரும் இவ்வைபவத்தில் கலந்துகொண்டு டாக்டரின் சேவையைப் பாராட்டிப் பேசினர்.

......

### பொருட்காட்சி

(உடுப்பிட்டி)

புலோலி றோ. க. த. க. பாடசாலையின் கல்விப் பொருட்காட்சி அண்மையில் நடைபெற்றது,

இப்பொருட்காட்சி வடமராட்சிக் கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்தலைவரும் கரவெட்டி திரு. இருதயக் கல்லூரி அதிபருமான திரு. தோமஸ் ஈப்பன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார். (கு)

### தவக்கால நற்சிந்தனை



**எனக்காக இத்தனை பாடுகள்**

இராப்போசன சாலையில் பன்னிரு அப்போஸ்தலர்களுடன் இயேசு இருக்கிறார். "எழுந்திருங்கள், இங்கிருந்து போவோமாக" என்று இயேசு கூறுகிறார். தமது பாடுகளைத் தொடங்க ஒலிவமரத் தோப்புக்கு போகிறார்.

அவர் தாமாகவே வேதனையைத் தெரிந்துகொண்டார். அவர் கடவுள். எனவே அவரது ஒவ்வொரு செய்கையும் எல்லையற்ற மதிப்புள்ளது. அகில உலகின் பாவங்கள் அனைத்திற்கும் பரிகாரம்செய்ய அவர் ஒரு சிறிய செய்கை செய்திருந்தாலும் போதும். ஒரு சொட்டு இரத்தம் வடித்தாலும் போதும். என்றாலும் அவர் தமது பாவங்களுக்கு நம் குற்றங்களுக்கு, பரிகாரம் செய்யும்பொருட்டு கொடிய பாடுகளைப் படவேண்டும் என்பது பிதாவின் சித்தம். தம் பிதாவுக்குக் கீழ்ப்படிந்தும், எம்மீதுள்ள எல்லையற்ற அன்பினால் தூண்டப்பட்டும் அவர் வேதனைகளைச் சகிக்கின்றார். எனக்காக அவர் பாடுபடவிருக்கிறார்.

உனது தாராள குணத்தை இயேசுவின் தாராள குணத்துடன் ஒப்பிட்டுப் பார்! இதைப்பற்றிச் சிந்திப்பதில் சிறிதுநேரம் செலவழி! இயேசுவுக்காக நான் என்ன செய்திருக்கிறேன். அவருக்காக என்ன செய்கிறேன்? இனி என்ன செய்வேன்?

—வண மேரி பஸ்ரியன் அடிகள்

......

### தையல் மெஷின்கள் வழங்கப்பட்டன

(புலோலி)

அரசாங்கத்தின் சிறு கைத்தொழில் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள யுவதிகள் தையற் பயிற்சியினை மேற்கொள்வதற்கு வசதியளிக்குமுகமாக மூன்று தையல் மெஷின்கள் வழங்கப்பட்டுள்ளன.

புலோலி கிழக்கு ஞானசம்பந்தர் கலைமன்றத்திற்கும் புலோலி மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கும், யாழ். தொழிற்திணைக்களத்தினால் அல்வாய் வடக்கில் நடாத்தப்பட்டுவரும் தையற் பயிற்சி நிலையத்திற்கும் இத்தையல் மெஷின்கள் வழங்கப்படவுள்ளதாகப் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலும் தெரிவித்தார்.

---

### கட்டிடம் திறக்கப்படும்

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டைத்தொகுதி முன்னாள் எம். பியும், கூட்டுறவு இயக்கத்தின் தந்தையுமான அமரர் வி. வீரசிங்கத்தின் ஞாபகார்த்தமாக மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நிறுவப்பட்டுவரும் மாடிக் கட்டிடத்தின் வேலைகள் துரிதமாக நடைபெற்றுவருகின்றன.

கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தினரால் சுமார் இரண்டு லட்ச ரூபா செலவில் அமைக்கப்பட்டுவரும் இந்த ஞாபகார்த்தக் கட்டிடத்தைப் பழைய மாணவர் சங்கத்தின் 60 வது வருட நிறைவு தினமான எதிர்வரும் மே மாதம் 31ம் திகதியன்று திறந்துவைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகக் கல்லூரி அதிபர் திரு. சாமி தெரிவித்தார். (அ)

### ★ சூடான - சுவையான ஒரு நட்சத்திரப்பேட்டி

ஈழத்துக்கு விஜயம் செய்த நடிகர்கள் நாகேஷ், ஜெய்சங்கர், அசோகன் ஆகிய மூன்று கலைஞர்களும் தாயகம் திரும்புவதற்கு முன்னர், "ஈழநாடு" பத்திரிகைக்கு அளித்த சிறப்புப் பேட்டி நாளை — வெள்ளிக்கிழமை "ஈழநாடு" இதழில் வெளிவருகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஒரு 'கற்பு' — சந்தேகிக்கப்படுகிறது

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தமிழ் இசைக் கலைஞர்களுக்கான தெரிவை அண்மையில் நடாத்தியது.

கடந்தமுறை நடைபெற்ற தேர்வு தொடர்பாக கிளப்பப் பட்ட பல்வேறு முறைப்பாடு கள், அதிருப்திகளின் விளைவாகத்தான், இந்தியாவிலிருந்து ஒருவரை நடுவராக அழைத்து இந்தத் தேர்வை நடாத்த கூட்டுத்தாபனம் தீர்மானித்திருக்கவேண்டும்

அந்தவகையில், அரசின் அநுசரணையுடனும், அகில இந்திய வானொலியின் ஆலோசனையுடனும் சென்னை மத்திய கருநாடக இசைக்கல்லூரி முதல்வர் பேராசிரியர் பி, என். கிருஷ்ணனை கூட்டுத்தாபனம் நடுவராக அழைத்திருந்தது.

பேராசிரியர் கிருஷ்ணன் இலங்கை வந்து, க ந்த நவம்பர் மாதம் முதலாந்திகதியிலிருந்து 25 ந் திகதிவரை, சகல பிரிவுகளுக்குமான வாய்ப்பாட்டு, வாத்தியக் கலைஞர்களுக்கான தேர்வை நடாத்தி விட்டுச் சென்றுவிட்டார்.

பெறுபேறு......!

மீண்டும் முறைப்பாடுகள் மீண்டும் அதிருப்திக் குற்றச் சாட்டுக்கள் தான்!

யார்தான் - எப்படித்தான் தேர்வை நடாத்தினாலும் இந்த முறைப்பாடுகளும், அதிருப்திக் குற்றச் சாட்டுக்களும் எழத்தான்செய்யும் என்றும் கூறலாம்,

ஆனால், தன்னுடைய 'கற்பில்' மற்றவர்கள் சந்தேகங் கொள்வதற்கு -- மாசு கற்பிப்பதற்கு ஏற்றவிதத்தில் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நடந்திருக்கிறது என்பதை மறைத்து விடலாமா?

### ஆட்சேபனை எழுப்பப்படவில்லை

திரு. ரி. என். கிருஷ்ணன் நடுவராக அழைக்கப்பட்டதில் பொதுவாக ஆட்சேபனை எதற்கும் இடமில்லை, அப்படி ஆட்சேபனைகள் எதுவும் எழுப்பப்பட்டதாகவும் இல்லை.

கள். அவர்கள் கௌரவமாக நடத்தப்படவேண்டும்.

வயதின் முதிர்ச்சியால் ஏற்படக்கூடிய குறைபாடுகளின் காரணமாக தங்களைத் தரம் குறைக்க முடலவேண்டாம் என்று கோரிய அவர்கள், தமக்கு அளிக்கப்படும் நிகழ்ச்சிகளை வேண்டுமானால் குறையுங்கள் என்றும் கேட்டார்கள்.

—இதில் என்ன தவறிருக்கிறது இத்தனைநேர்மையை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் திடம் காணவில்லை என்பது தானே குறையாகவிருக்கிறது

ஆக, கடைசியில் அந்த சிரேஷ்ட கலைஞர்களும் தேர்வுக்குப் போனார்கள்.

ஆனால் சில உடன்பாடுகள் அல்லது உறுதி மொழிகள் அளிக்கப்பட்டதையடுத்தே அவர்கள் தேர்வுக்குச் சென்றதாக கூறப்படுகிறது.

அதன்படி, அவர்களிடம் அதிகமான கேள்விகள் எதுவும் கேட்கப்படவில்லை என்றும் அவர்களும் தோற்றினார்கள்' அவ்வளவுதான் என்றும் பேசப்படுகிறது.

ஆக. இதுஎப்படியோ! ஆனால் ஏற்கனவே அதி உயர்தரத்தில் இருந்த எவரையும்தரம்குறைப்பதில்லை, என்ற முறை கூட்டுந்தாபனத்தால் பின்பற்றப் பட்டதா?

இப்படியும் பேசப்படுகிறது.

அத்துடன் மற்றெல்லாத் தரங்களிலும் பலர் தரம்குறைக்கப்பட்டுள்ள போது அதி உயர் தரத்திலிருந்த எவருக்கும் அவ்வாறு நேரவில்லை.

அனால் அப்படி தரம் குறைக்கப்படத்தான் வேண்டுமென்றோ அல்லது தரமற்றவர்கள் அத்தரத்தில் இருக்கிறார்கள் என்றோ கூறுவதா

தானைக் காணவே இல்லையாம். என்ன செய்வது என்று அங்கலாய்த்தும் சுலபமாகவே தீர்வும் கிடைத்துவிட்டதாம்.

—அதாவது. அக்கலைஞர் ஏற்கனவே அதி உயர் தரத்தில் இருந்தவர் என்பதால் அதே தரத்திலேயே சேர்த்து விட்டால்சரி என்று முடிவானதாம்!

இது இவ்வாறுக, இப்போது நடைபெற்ற தேர்வில் அதி உயர் தரத்தில் மொத்தம் 33 கலைஞர்களும் 'ஏ' தரத்தில் 11 கலைஞர்களும், 'பி' தரத் 887 கலைஞர்களும் தெரிவாகியிருக்கிறார்கள்,

வாய்ப்பாட்டை மாத்திரம் பார்த்தால் அதி உயர் தரம்— 13. 'ஏ' தரம் — 18; 'பி' தரம் — 51.

பொதுநோக்கில். எதிர்பாராதவிதத்தில் சிலர் மேலே போயிருக்கிறார்கள்; சிலர் கீழே இறங்கியுமிருக்கிறார்கள்,

ஆனால் அதை வைத்துக் கொண்டு தேர்வை ஆட்சேபித்து விடவோ குறைகூறி விடவோ முடியாது.

**மகாலிங்கசிவம்**

# ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் இசைக் கலைஞர் தேர்வும் காதில் விழும் சங்கதிகளும்

திரு. கிருஷ்ணனின் மாணவர்கள் அநேகம்பேர் இங்கு இருக்கிறார்கள். ஆனாலும் அவர்மீது மற்றவர்கள் எவரும் சந்தேகம் கொள்ளவில்லை.

'தனியொரு நபரே நடுவராக தேர்வை நடத்தலாமா?' என்ற வினவொன்று எழுப்பப்பட்டேயிருந்தது.

அதுபிழையான வினா அல்ல, அதேவேளை, அப்படி தனியொருவரே நடுவராவது முற்றிலும் பிழையானதுமல்ல.

திரு. கிருஷ்ணன்தான் நடுவராக வரப்போகிறார் என்ற சமாச்சாரம் தேர்வு நடப்பதற்கு எவ்வளவோ நாட்களின் முன்பே தரிந்துவிட்டது.

சிலர் இந்தியாவிலேயே அவரைச் சந்தித்திருக்கலாம்.

ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் இலங்கையில் அவரைக் கொண்டுசென்று 'சிறை' வைத்த 'அசோகவனத்திலும்' சிலர் சென்று கண்டிருக்கலாம்.

ஆனாலும், கிருஷ்ணன்மீது எல்லோருக்குமே நம்பிக்கையிருந்தது.

முன்னதாக, 1978இல் நடைபெற்ற தேர்வில், தேர்வின் முறைபற்றியும், முடிவுகள் பற்றியும் ஆட்சேபனை தெரிவித்ததுடன், வானொலி நிகழ்ச்சிகளில் அதன்பின்னர் பங்குபற்றாது பகிஷ்கரித்த கலைஞர்களும் இருக்கிறார்கள் அவர்களும் கிருஷ்ணனை ஏற்று தேர்வுக்குச் சென்றார்கள்

அதேவேளை, அதிஉயர் பிரிவைச் சார்ந்த சிரேஷ்ட கலைஞர்கள் பலர், தாமும் தேர்வுக்கு அழைக்கப்படுவது குறித்து எதிர்ப்புக்குரல் எழுப்பினார்கள்.

முதிய கலைஞர்கள் நம்முடைய பாரிய சொத்துக் காது.

ஆனால் அப்படியொரு முறை பின்பற்றப்பட்டதெனின் அது நீதியானதாக இருக்குமா?

ஏற்கனவே நடைபெற்ற தரம்பிரிப்புகள் - தேர்வுகள் முறையற்றவை என்று அவற்றை நிவர்த்திக்கத்தானே இந்தத் தேர்வு நடைபெற்றது?

எனின், கடந்த தேர்வை ஆதாரமாக வைத்து அதில் அதி உயர் தரத்துக்கு உயர்த்தப்பட்ட எவரையும் தரம் குறைப்பதில்லை என்று ஒரு நிபந்தனையிடப்பட்டால் அப்படி ஒரு முறை பின்பற்றப் பட்டிருந்தால் அது எப்படி....?

சிரேஷ்ட கலைஞர்கள் என்பது வேறு அதி உயர் தரத்திலுள்ள கலைஞர்கள் என்பது வேறு.

அதி உயர்தரத்திலிருந்த கலைஞர்கள் அனைவருக்கும் இப்படியொருமுறை பின்பற்றப்பட்டிருந்தால் வானொலியில் சுமார் 30 வருடங்கள் பாடிய 'ஏ' தரக்கலைஞர், பட்டியலிலிருந்தே முற்றாக நீக்கப்பட்டிருந்தால் அது என்ன நியாயம்?

கடந்த முறைத் தேர்வில் எப்படியோ அவர் அதிஉயர் தரத்தினுள் நுழைந்திருந்தாரானால் இன்று பட்டியலிலேயே இல்லாத அவர் அதி உயர்தர கலைஞராக இருந்திருப்பார்!

—இது விந்தையாக இல்லையா, என்ன?

ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் இப்படி ஒரு முறையைக் கையாண்டதாகவே கூறப்படுகிறது.

—இதனை மேலும் ஊர்ஜிதப் படுத்துவதாகிறது. இன்னொரு தகவல்.

ஒருவரின் பெறுபேற்று

பெறுபேறு என்பது குறித்த தேர்வை மட்டும் சார்ந்தது தான்.

அத்துடன், பெறுபேற்றை ஏற்கவேண்டியதும்தான்

### இலட்சிய ரீதியில் ஏற்கக் கூடியனவா

ஆனால், அப்படி "இலட்சிய ரீதியில்' ஏற்றுக்கொள்ளக் கூடியனவாக இப்பெறுபேறுகள் அமைந்தனவா? என்பது தான் பிரச்னை,

நவம்பர் 1ந் தேதி ஆரம்பித்து நவம்பர் 25ந் தேதி, தேர்வு முடிவுறும் கடைசித் தினத்தன்றே- 'திரு. ரி. என். கிருஷ்ணன் இந்தியா திரும்பு முன்னரேயே பெறுபேறுகள் வெளியிடப்படாவிடின் ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் அவப்பெயர் கேட்கநேரிடும்' என்று பத்திரிகையொன்றில் வெளியானது.

ஆனல் ரி. என். கிருஷ்ணன் 27ந் தேதி திரும்பிவிட, பெறுபேறுகள் வெளியானது எப்போது?

1980 ஜனவரி 18, 19, 21ந் தேதிகளில்!

கிட்டத்தட்ட இரு மாதங்களின் பின்னர்!

### 'கற்பி'ல் சந்தேகம்

பெறுபேறுகளில் காணப்பட்ட சில சந்தேகங்களை ஊர்ஜிதப்படுத்துவதுபோல் அமைந்து, கூட்டுத்தாபனத்தின் 'கற்பில்' சந்தேகம் கொள்ள வைத்தது இந்தத் தாமதந்தான்!

இத்தாமதம்பற்றி பத்திரிகைகள் பலவற்றில் வினா எழுப்பப்பட்டதுடன் தொலைபேசி மூலமும் புகார் தெரிவிக்சப் பட்டதாகவும் கூறப்படுகிறது.

கடந்த முறை நடைபெற்ற தேர்வுபற்றி பாராளுமன்றம் வரை பிரச்னை கிளப்பப்பட்டதையடுத்துத்தான் பெருந்தொகைப் பணத்தையும் செலவு செய்து இந்தியாவிலிருந்து திரு. ரி. என். கிருஷ்ணனை அழைத்து தேர்வு நடத்தப்பட்டபோது எழுந்த, எழக்கூடிய பிரச்னைகளை நன்கு உணர்ந்த ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ஏன் இப்படிச் சந்தேகத்துக்கிடமான முறையில் நடந்துகொண்டது என்பது தான் புரியவில்லை.

சிரேஷ்ட கலைஞர்கள் பகிஷ்கரிப்புக்குரல் எழுப்பிய சமயம், சிங்கள சிரேஷ்ட கலைஞர்கள் எவரும் இப்படி ஒரு கோரிக்கையை விடவில்லையே என்று கூட்டுத்தாபனம் கூறியதாம்.

அது ஒரு நியாயமல்ல; அது வேறு விடயம். ஆனல் அப்படி உதாரணம் காட்டிய ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம், இந்தியாவிலிருந்து நடுவர் ஒருவர் அழைக்கப்பட்டு சிங்கள கலைஞர்களுக்கு நடாத்தப்பட்ட தேர்வின் முடிவுகள் உடன் அறிவிக்கப்பட்ட விதத்தில் தமிழ்க் கலைஞர்களின் முடிவுகளையும் ஏன் அறிவிக்கவில்லை?

தமிழ்க் கலைஞர்களின் பெறுபேறுகள் தமிழ் நிகழ்ச்சி பணிப்பாளரினதோ அன்றி கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளரினதோ பொறுப்பில் இருக்கவில்லை என்றும், இயக்குநர் சபை உறுப்பினர் ஒருவரின் 'பாதுகாப்பிலேயே' நீண்ட காலம் இருந்ததாகவும் கூறப்படுகிறது.

அப்படியானல் அதுவும் முறையானதாகுமா? என்ற வினவும் எழுகிறது

மற்றொருவருக்கு வேறொருவரின் பெயரில் பெறுபேறு சென்றுள்ளது. அதுபற்றி அவர் விசாரித்ததில் அது உம்முடைய பெறுபேறுதான் என்று தெரிவிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

ஆக, 'குளிக்சப்போய்ச் சேறு பூசிய' கதையாகத்தான் இதுபற்றி பேசப்படுகிறது.

பலரும் பலவிதமாக குறைகளும், அதிருப்தியும் தெரிவிக்கிறார்கள்.

பத்திரிகைகளிலும் ஆசிரியர்களுக்கு கடிதங்கள் வருகின்றன.

கலையும் கலைஞர்களும் சமூகத்தில் உயர்வோடு பேணப் படவேண்டும்.

மக்களுக்கு அதில் அக்கறை இருக்கிறது; வானொலிக்கு அதில் பெரும் பொறுப்பு இருக்கிறது.

இதைத்தான் கூறவேண்டியதாகிறது.

குறித்த இத்தேர்வு தொடர்பாக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் 'கற்பு' எப்படியோ சந்தேகிக்கப்படத்தான் செய்கிறது.

ஆனல் தனது 'கற்பை' நிரூபிக்க அது தீக்குளிக்குமா?' அல்லது 'தீக்குளிக்கவேண்டுமா' என்பது வேறு விடயம்.

## ஷாவுக்கு! சுகயீனம்

பஹ்ரேமா, மார்ச் 12 பனமாவில் இருக்கும் ஈரானிய ஷா சுகயீனமுற்றிருக்கிறார் என அறிவிக்கப்படுகிறது. (இ)

## வர்த்தகத் தூதுவர்கள்

(கொழும்பு)

இலங்கையின் வர்த்தகத்தையும், முதலீட்டையும் வெளிநாடுகளில் அபிவிருத்திசெய்யும் நோக்குடன் தனிப்பட்ட நிறுவலத்தைச்சேர்ந்த இருவர் வர்த்தகத் தூதுவர்களாக, வர்த்தக, கப்பல்துறை அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலியினல் நியமிக்கப்பட்டுள்ளனர்.

திரு. ஏ. ஜே. டி. ஏபிரகாம் மேற்கு ஜெர்மனிக்கும், திரு. லலித்வீரதுங்கா டென்மார்க்கிற்கும் வர்த்தகத்தூதுவர்களாகச் செல்லவுள்ளனர்.

இலங்கையின் வர்த்தகத்தை அபிவிருத்திசெய்வது சம்பந்தமான ஒழுங்குகளை இவர்கள், ஐரோப்பிய பொருளாதார சமூகத்துடன் இணைந்து மேற்கொள்வார்கள். இவர்களது கடமைகள் பற்றி வர்த்தகஅமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி ஏற்கனவே இரு தூதுவர்களுக்கும் விளக்கிக்கூறியுள்ளார். (வெ)

## இன்று அருளுரை

(யாழ்ப்பாணம்)

'குருமகராஜ்ஜி வெளிப்படுத்தும் ஞான அறிவு' என்பது பற்றிய அருளுரையை குருமகராஜ்ஜியின் மகாத்மாக்களுள் ஒருவர் இன்று மாலை யாழ், வீரசிங்கம்மண்டபத்தில் நிகழ்த்துவார். [இ]

# வரிகொடுப்பதில்லையென வரியிறுப்பாளர் முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை மதிபூஸ் வீதிக்கருகிலுள்ள குளத்துவயல் காணிகளில் குடியிருக்கும் சுமார் முப்பது குடும்பங்கள் யாழ். மாநகர முதல்வருக்கு சமாப்பித்துள்ள மகஜரில் நீண்ட காலமாக தமது பகுதியிலுள்ள மின்சார குறைபாடு, வீதிக்குறைபாடு, குடிநீர்ப்பிரச்னை என்பவற்றை மாநகரசபை தீர்த்துவைக்கத் தவறின் தாங்கள் வரிகொடாமல் விடப்போவதாக அறிவித்துள்ளனர்.

யாழ். மாநகர முதல்வருக்கு அவர்கள் சமர்ப்பித்துள்ள மகஜரின் விபரம் வருமாறு: யாழ். கத்தோலிக்க மத பீடத்துக்கு சொந்தமாக இருந்த மேற்படி 30 காணித்துண்டுகளையும் பொதுமக்களின் பாவனைக்கு அவர்கள் விற்றபோது மூன்று சிறு ஒழுங்கைகளை அவர்கள் அமைத்தனர். அன்று முதற்கொண்டு யாழ். மாநகர சபை இவ் ஒழுங்கைகளில் எவ்விதமான திருத்தத்தையும் செய்யவில்லை. இவ் ஒழுங்கைகள் கடல் மட்டத்திற்கு கீழே உள்ளதால் மழை காலங்களில் இப்பகுதியில் நீர் தேங்கி நிற்கிறது. இம்மழைநீரை குளத்திற்கு கொண்டுசெல்ல வடிகால்களும் அமைக்கப்படவில்லை மேலும் இவ் ஒழுங்கைகளில் மூன்ருவது ஒழுங்கைக்கு பக்கத்தில் அமைந்துள்ள வடிகாலிலும் அது துப்பரவு செய்யப்படாமையால் ஒரே கழிவுநீர் தேங்கிநின்று சுகாதாரச் சீர்கேடுகளையும் நுளம்புத் தொல்லையையும் ஏற்படுத்துகிறது. மேலும் இவ்வீதிகள் துப்பரவு செய்யப்படாமல் குப்பை கூளங்களாலும் சுகாதாரக் கெடுதியை விளைவிக்கிறது.

1975ம் ஆண்டு ஒரு ஒழுங்கைக்கு நாலு மின்சாரக் கம்பங்கள் நாட்டப்பட்டன. 1979-ல் மற்றொரு ஒழுங்கைக்கு இரண்டு கம்பங்கள் நாட்டப்பட்டன. ஆனல்இதுவரை இவற்றுக்கு மின்சார விநியோகம் பேற்கொள்ளப்படவில்லை. அதேபோல் இப்பிரதேசத்தில் அமைந்துள்ள வீடுகளும் மின்சார பாவனைக்கேற்ப வயறிங் செய்யப்பட்ட நிலையில் இருப்பினும் மாநகரசபையின் சீர்கேட்டால் மின்சாரத்தைப் பெற முடியவில்லை.

இப்பகுதிக்கு குடிநீர்க்குழாய் ஒன்று மட்டுமே இருப்பதால் முப்பது குடியிருப்பாளர்களும் இதிலிருந்து குழாய்நீரைப் பெற பெரும் அவதியுறுகின்றனர்.

பத்து வருடங்களாக இக்குறைபாடுகள்பற்றி மாநகர சபைக்கு பல முறையீடுகளைச் செய்தும் எவ்வித பயனுமில்லை எனவே எமக்கு இவ்வசதிகளை யாழ். மாநகரசபை அளிக்கும் வரை எம்மிடம் வரி அறவிட வேண்டாம் எனவும் நாம் செலுத்திய வரிகளைத் திருப்பித் தரும்படியும் கேட்டுக்கொள்கிறோம். அத்தோடு எமது பிரச்னைகள் தீர்க்கப்படும்வரை நாமும் வரிகொடுக்க மாட்டோம் அறியத்தருகிறோம். (கி)

## சமாதானநீதவான்

(வவனியா)

வவனியாவைச்சேர்ந்த திரு. வைரமுத்த சிவசுப்பிரமணியம் வவனியா மாவட்ட நீதிபதி திரு. பற்றிக் பெர்னண்டோ முன்னிலையில் சமாதானநீதவானுக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

“வழுக்கை ஆற்றை ஆழமாக்கினால்

# ஆயிரக்கணக்கான ஏக்கர் வயல்கள் வளம்பெறும்”

[பண்டத்தரிப்பு]

"மூன்று தேர்தல் தொகுதிகளுக்கு ஊடாகச் செல்லும் வழுக்கையாறு ஆழமாக்கப்பட்டு அபிவிருத்திசெய்யப்படுமானால் இப்பிரதேசத்திலுள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர்வயற் காணிகளுக்கு நீர்பாசன வசதி கிடைக்கக்கூடியதாக இருக்கும். கடந்த 1978ம் ஆண்டில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் இந்த வழுக்கைஆற்றை ஆழமாக்கி, அபிவிருத்திசெய்வதற்கு 10 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டும் வேலைகளில் ஒரு சிறு பகுதியே நிறைவேற்றப்பட்டது. இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்தினால் இப்பகுதி விவசாயிகள் பெரும் நன்மையடைவார்கள் என்பது திண்ணம்,"

இவ்வாறு கட்டுடை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற விவசாயக் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் வலி-தென்மேற்குப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. கி. கோபாலரத்தினம் குறிப்பிட்டார்.

கட்டுடை சைவவித்தியாசாலை மண்டபத்தில் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் திரு. ஆ. மார்க்கண்டு தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் பயிர்க்காப்புறுதிப் பிராந்திய உதவிப் பணிப்பாளர் திரு. எஸ். சிவகுரு உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

"பயிர்க்காப்புறுதித்திட்டம் விவசாயிகளுக்கு மிகவும் நன்மையளிக்கக்கூடிய சிறந்ததொரு திட்டமாகும். எமது யாழ். மாவட்டத்திலுள்ளவிவசாயிகள் இக்காப்புறுதித் திட்டத்தில் பங்குபற்றி தமக்கு பயிரழிவுகளினால் ஏற்படும் நட்டங்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ள முடியும். நெல்விதைப்பதற்கு முன்னர் சகல விவசாயிகளும் காப்புறுதி செய்துகொள்ள முன்வரவேண்டும். கடந்தகாலங்களில் விவசாயிகள் காப்புறுதிக்கு செலுத்திய கட்டுப்பணத்திலும் பார்க்கக் கூடுதலான தொகையைக் காப்புறுதி நஷ்டமாக விவசாயிகளுக்கு அரசாங்கம் வழங்கியுள்ளது."

தொல்புரம் கமநலச் சேவை பெரும்பாக உத்தியோகத்தர் திரு, சு. தவராசா உரையாற்றுகையில், விவசாயிகள் கமநலச்சேவை நிலையங்கள்மூலம் வழங்கப்படும் விவசாய அடையாள அட்டைகளைப் பெற்று கமத்தொழில் திணைக்களம் வழங்கும் சகல உதவிகளையும் பெற்றுப்பயனடையவேண்டும் என்றும், செய்கைபண்ணப்படாமல் எந்த ஒரு காணியையும் சும்மாவிட்டுவைத்திருக்கக்கூடாது என்றும், தங்களது காணிகளை விவசாயிகள் இடாப்பில் பதிவுசெய்துகொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

மானிப்பாய் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் திரு. ச. சிவகுமாரன் உரையாற்றுகையில் சகல விவசாயிகளும் தங்கள் பிரச்னைகளை பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களுடன் கலந்து ஆலோசித்துத் தீர்த்துக் கொள்ளவேண்டும் என்றார்.

இக்கருத்தரங்கில் நவாலி பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் திரு. கௌரிகாந்தன், விவசாயிகள் சார்பில் திரு. சி.முதலியார், க. தர்மசீலன் ஆகியோர் உட்பட பலர் உரையாற்றினார்கள். ஆடு, மாடு போன்ற கட்டாக்காலிகளின் உரிமையாளர்களும் இக்கருத்தரங்கில் பங்குபற்றி விவசாயிகளுடன் ஒத்துழைப்பதாக உறுதியளித்தார். திரு இரத்தினசிங்கம் நன்றிதெரிவித்துப் பேசினார்.

# ‘இந்து குருமாருக்கு சீருடை வேண்டும்’

## அமைச்சர்‘இராசு’வுக்குமகஜர்

(யாழ்ப்பாணம்)

"பௌத்த, கிறீஸ்தவ, இஸ்லாமிய மதகுருமாரை இலகுவில் அடையாளம் காணக்கூடியதாக இருப்பது போல், இந்துமதகுருமாருக்கு சீருடையோ, சின்னமோ அவர்களை அடையாளம் காணுவதற்கு இல்லை. இதனால் இந்து மதகுருமார்கள் சாதாரணமக்கள் போல் கணிக்கப்பட்டு, அரசாங்கத்தால் ஏனைய மதகுருமாருக்கு வழங்கப்படும் சலுகைகளைப்பெறமுடியாத நிலையிலுள்ளார்கள்"

மேற்கண்டவாறு கோரும் மகஜர் ஒன்றை தமிழ் மொழி அமுலாக்கல் இந்துக்கலாச்சார அமைச்சர் திரு. செ, இராசதுரைக்கு, நீர்வேலி காயாட்சி அம்பாள் இந்து பரிபாலன சபைச்செயலாளர் திரு. க சின்னராசா அனுப்பிவைத்துள்ளார்.

அவர் அம்மகஜரில், மேற்கூறப்பட்ட விஷயம் பற்றித் தீர்மானிப்பதற்கு நாட்டிலுள்ளஇந்து மதத்தலைவர்களையும், குருமார்களையும் கொண்ட ஒரு மகாநாட்டைக் கூட்டி ஆவன செய்யுமாறும் கேட்டுள்ளார். (வெ)

# இலங்கையின் அபிவிருத்திக்கு மேலதிக அமெரிக்க பொருளாதார உதவி

(கொழும்பு)

மூன்று திட்ட நடவடிக்கைகளுக்கு 90 லட்சம் அமெரிக்க டார்லர் மேலதிக நிதியுதவி அளிப்பதற்கான ஒப்பந்தங்கள் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கத்துக்கும் அமெரிக்க அரசாங்கத்துக்கும் இடையில் கைச்சாத்தாகின.

இந்த மேலதிக நிதி, மூன்று துறைகளில் அபிவிருத்திப் பணிகளுக்கு உதவும்.

நீர்ப்பாசனத் திட்டங்களில் உள்ள தண்ணீரின் உபயோகத்தை அதிகரிப்பதன் மூலம் உணவு உற்பத்தியைப் பெருகுவது, குறித்த மூன்று திட்டங்களில் ஒன்றாகும்.

பசளைப் பாவனை மூலம் விளைச்சலைப் பெருக்கி நெல் சாதுபடி செய்யும் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பது இரண்டாவது திட்டமாகும்.

இலங்கையையும் அமெரிக்காவையும் சேர்ந்த தனிப்பட்ட தொண்டர்சேவை அமைப்புக்களின் வாயிலாக உள்ளூர் மக்களின் தம் சொந்த அபிவிருத்தியில் பங்கு கொள்வதை எளிதாக்குவது மூன்றாவது திட்டமாகும்.

நிதி, திட்டமிடல் அமைச்சில் நடைபெற்ற வைபவம் ஒன்றின்போது அமைச்சின் பதில் செயலாளர் திரு.சி பி. சண்முகம், அமெரிக்கத் தூதுவர் திரு. டொனல்ட் ஆர், துசெயின் ஆகியோர் பிரஸ்தாப ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டனர். வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் இயக்குநர் திரு. எஸ். வேலாயுதன், அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்தின் உதவி இயக்குநர் திரு. ஜோன் ஆர். எரிக்சன் ஆகியோர் இந்த வைபவத்தின்போது பிரசன்னமாக இருந்தனர்.

தண்ணீர் நிர்வாகத்திட்டம்: கல்லோயா இடது கரையைச்சேர்ந்த 57,000 பேருக்கு இத்திட்டம் நேரடிப் பயனை தரும். அவர்களுடைய நீர்ப்பாசன முறையைச் சீராக்கவும். நவீனமயமாக்கவும் இத்திட்டம் உதவும். துரித மகாவலி அபிவிருத்தித்திட்டம் உட்பட நாடெங்கும் உள்ள பிரதான நீர்ப்பாசனத் திட்டங்களில் விவசாய உற்பத்தித்துறையில் அரசாங்கத்தினதும் விவசாயிகளினதும் தண்ணீர்ப் பாவனையை அதிகரிப்பதற்கான சிறந்த தண்ணீர் நிர்வாக நடவடிக்கைகள் சம்பந்தமான பரிசோதனைகள், பயிற்சித்திட்டங்கள், மற்றும் நடவடிக்கைகள் ஆகியன மேற்கொள்ளப்படவுள்ளன. முழுத்திட்டத்துக்குமெனத் திட்டமிட்ட மொத்தமேலதிக 9½ லட்சம் அமெரிக்க டாலர் நிதியுதவியில் 34 லட்சம் அமெரிக்க டாலர் நிதியை இப்போது வழங்குவதற்கு மேற்படி ஒப்பந்தம் வழி செய்கிறது.

விவசாய உற்பத்தித் திட்டம்: நெற்சாகுபடியில் ஈடுபடும் விவசாயிகளுக்கு 1980 ஆம் ஆண்டின் பெரும்பகுதியில் அவர்களின் யூரியா பசளைத் தேவைக்கான நிதியை வழங்குவதன் மூலம் அவர்கள் பயனடைவர். ஒப்பந்தத்தின் கீழ் இதற்கு 50 லட்சம் அமெரிக்க டாலர் கிடைக்கும். மொத்த உதவியை இது 3 கோடியே 10 லட்சம் அமெரிக்கடாலர்களால் அதிகரிக்கும்.

தனிப்பட்ட தொண்டர் அமைப்புக் கூட்டு நிதியுதவித் திட்டம்; இலங்கையின் உள்நாட்டுச் சமுகங்களைச் சேர்ந்த ஏராளமான மக்களுக்கு இது பயனளிக்கும். இலங்கையையும் அமெரிக்காவையும் சேர்ந்த தனியார் தொண்டர் அமைப்புக்களின் சமுக அபிவிருத்தி நடவடிக்கைகளால் இவர்கள்பயனடைவர். இதற்கு ஒப்பந்தத்தின் கீழ் மேலதிகமாக 6,00,000 அமெரிக்க டாலர் உதவி கிடைக்கும், இதக்கானமொத்த உதவி 25 லட்சம் அமெரிக்க டாலர் ஆகும்.

இலங்கைசுதந்திரம்அடைந்த பின்னர், இந்த ஒப்பந்தங்களில் அடங்கிய தொகை உட்பட, மொத்தம் 49 கோடியே 79 லட்சம் அமெரிக்க டாலர் நிதி உதவியை இலங்கைக்கு அமெரிக்கா வழங்கியுள்ளது. ‘பி. எல். 680’ திட்டத்தின் கீழ் வரும் உணவுக்கான கடனுதவி, அன்பளிப்பு என்பனவும் இதில் அடங்கும்,

## யாருடையது?

கட்டைவேலியைச் சேர்ந்த அரசாங்க ஒப்பந்தகாரர் திரு. வி. கந்தப்பு என்பவரால் சாவகச்சேரி வேம்பிராய் றோட்டில் கண்டெடுக்கப்பட்ட 1000 ரூபாவுக்கு மேலான காசோலை ‘ஈழநாடு’ காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அத்தாட்சி காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

## பதநீர் 1 போத்தல் 50 சதத்திற்கு கொள்வனவு

(நெல்லியடி)

வடபகுதி சீவல்தொழிலாளிகளிடமிருந்து பனம் பொருள் அபிவிருத்திச்சபை பதநீரை 1 போத்தல் 50 சதத்திற்குக் கொள்வனவு செய்யத்திட்டமிட்டுள்ளது.

உடுப்பிட்டி - கட்டைவேலி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுச்சங்க பிரமுகர்களுடனான கலந்துரையாடலின் போதே, பனம் பொருள் அபிவிருத்திச்சபை தலைவர் திரு. என். கனகசூரியர் மேற்கண்ட தகவலை வெளியிட்டிருந்தார்.

சீவல் தொழிலாளர்களை உற்சாகப்படுத்துவதற்காகவும், அதிகளவு பதநீரைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடனேயே இந்நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் தெரிவித்தார். இதுவரை 1 போத்தல் பதநீரை 40 சதத்திற்கே பனம் பொருள் அபிவிருத்திச்சபை கொள்வனவு செய்து வருவது குறிப்பிடத்தக்கது. (அ)


மீண்டும் ஆரம்பமாகிறது!

ஒரு நம்பத்தகுந்த போக்குவரத்துச் சேவை
இலங்கையில் போக்குவரத்துத் துறையில் முன்னோடியான

## சிலோன் மோட்டர் ட்ரான்சிட் கொம்பனி (1955) லிமிடெட்.

தமது போக்குவரத்துச் சேவையை 1980 மாரச் மாதம் 17-ம் திகதி முதல் மீண்டும் ஆரம்பிக்கவுள்ளது என்பதை பெருமையுடன் அறிவிக்கின்றது.

சி. எம். டி. (C. M. T.) கடுகதியில் யாழ்ப்பாணம் / கொழும்பு யாழ்ப்பாணம் பாதையில் பகலில் தினமும் சொகுசாக, சுகமாக பயணம் செய்யுங்கள்.

### ஆசனப் பதிவு செய்யுமிடங்கள்:

கொழும்பு - கொலட்ஸ் லிமிட்டெட்,
101, டி. எஸ். சேனநாயக்க மாவத்தை,
பொறளை, கொழும்பு—8.
தொலைபேசி; 96101 (5 லைன்)

யாழ்ப்பாணம் - யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்
420, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 370, 438, 537

| புறப்படும் நேரம் | புறப்படும் இடம் | போய்ச்சேரும் நேரம் |
|---|---|---|
| காலை 5-30 மணி | கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கெதிரில் | யாழ்ப்பாணம் 4-30 மணி மாலை |
| காலை 5-30 மணி | (1) யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச்சங்கம் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (2) கிருஷ்ண விலாஸ் ஹோட்டல்-கொடிகாமம் புகையிரத நிலையத்திற்கெதிரில் (காலை 6-00) | கொழும்பு 4-30 மணி மாலை |

### பயணச் செலவு

கொழும்பு — யாழ்ப்பாணம் — ஒரு வழி — ரூபா 45/- ஒருவருக்கு
கொழும்பு — அனுராதபுரம் — ஒரு வழி — ரூபா 30/- ஒருவருக்கு

## சிலோன் மோட்டர் ட்ரான்சிட் கொம்பனி (1955) லிமிடெட்.

(கொலட்ஸ் குழு அங்கத்தினர்)

101, டி. எஸ். சேனநாயக்க மாவத்தை, கொழும்பு—8.
தொலைபேசி: 96101 (5 லைன்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதியகட்சி ஆரம்பிக்கிறர் ஜெகஜீவன்ராம்!

## ஜனதாவின் 'ஏர் உழவன்' சின்னம்கோரி தேர்தல் கமிஷனருக்குக் கடிதம்

புதுடில்லி, மார்ச், 12
ஜனதா கட்சியிலிருந்து அண்மையில் வெளியேறிய திரு. ஜெ ஜீவன்ராம் விரைவில் தாம் புதியகட்சி ஒன்றை அமைக்கப்போவதாகத் தெரிவித்தார்.

இம்மாதம் 23ந் திகதி புதிய கட்சி ஆரம்பிக்கப்படும் என்றும் திரு. ஜெ ஜீவன்ராம் தெரிவித்தார்.

தாம் அமைக்க இருக்கும் புதிய கட்சிக்கு ஜனதா கட்சியின் சின்னமான 'ஏர்உழவன்' சின்னத்தையே வைத்திருக்கத் தாம் விரும்புவதாகவும், திரு ஜெகஜீவன்ராம் தெரிவித்துள்ளார்.

### தேர்தல் கமிஷனருக்கு கடிதம்

'ஏர் உழவன்' சின்னத்தைத் தமது கட்சிக்கு ஒதுக்கித் தருமாறு திரு. ஜெகஜீவன்ராம் தலைமைத் தேர்தல் ஆணையாளருக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

இந்திய லோக — ராஜ்ய சபைகளைச் சேர்ந்த 10 அல்லது 12 எம். பி. க்கள் தம்முடன் சேர்ந்து கொள்வார்கள் என்றும் திரு ஜெகஜீவன்ராம் கூறினார்

எந்தக்கட்சியிலும் தாம் சேரப்போவதில்லை என்று கூறிய திரு. ஜெகஜீவன்ராம், ஆர். எஸ். ஏ ஸ்.ஸுடன் தொடர்பில்லாத எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களும் கட்சி சார்பற்ற அரசியல்வாதிகளும் தமது புதியகட்சியில் சேர்ந்து கொள்ளலாம் என்றும் கூறினர். (இ)

## ஆஸ்பத்திரியில் ரயில்வே மந்திரி திரிப்பாதி

புதுடில்லி. மார்ச் 12
இந்திய லோகசபைக் கூட்டத்தில் திடீரென மயங்கி விழுந்து ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட ரயில்வே மந்திரி திரு கமலபதி திரிப்பாதி அபாயநிலையைத் தாண்டிவிட்டார் என்று டாக்டர்கள் தெரிவித்தனர்.

பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தியும் மற்றும் அமைச்சர்களும் அவரைச் சென்று பார்வையிட்டனர். [இ]

தேசாய், சரண்சிங் குடும்பத்தினர் ஊழல்?

## பாராளுமன்றத்தில் வைத்தியலிங்கம் அறிக்கை

புதுடில்லி, மார்ச் 12
இந்திய முன்னாள் பிரதமர்களான திரு. மொரார்ஜி தேசாய், திரு. சரண்சிங் ஆகியோரின் குடும்ப உறுப்பினர்களுக்கு எதிராகச் சுமத்தப்பட்ட லஞ்சஊழல் குறித்து விசாரணை செய்த வைத்தியலிங்கம் கமிஷன் அறிக்கை இந்திய பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த அறிக்கை குறித்து பாராளுமன்றம் ஆராயும் அதேவேளையில் அறிக்கை தொடர்பாக என்ன நடவடிக்கை எடுப்பது என்பது குறித்து உள்துறை அமைச்சு சட்ட அமைச்சிடம் ஆலோசனை கோரியுள்ளது.

திரு. மொரார்ஜி தேசாயின் புதல்வர் காந்தி தேசாய், அவரது மனைவி திருமதி பத்மாவதி தேசாய், திருமதி காயத்திரி தேவி சரண்சிங் ஆகியோர் மீது விசாரணைக்கமிஷன் சட்டத்தின்கீழ் முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என நீதிபதி திரு. வைத்தியலிங்கம் சிபார்சு செய்திருந்தது தெரிந்ததே (இ)

விலைவாசி அதிகரிப்பை எதிர்த்து

## ஐந்து எதிர்க்கட்சிகள் புதுடில்லியில் பேரணி

புதுடில்லி, மார்ச் 12
விலைவாசி அதிகரிப்பு, மோசமாகிவரும் சட்ட ஒழுங்கு, பெண்கள், ஹரிஜனர்கள் ஆகியோர்மீதான அட்டூழியங்கள் ஆகியவற்றை எதிர்த்து ஐந்து எதிர்க்கட்சிகள் நேற்று புதுடில்லியில் பேரணி ஒன்றை நடத்தின.

அர்ஸ்காங்கிரஸ், லோக்தள், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்ஸிய கம்யூனிஸ்ட், புரட்சி சோஷலிஸ்ட் ஆகிய கட்சிகளே இப்பேரணியை நடத்தின.

முன்னாள் அமைச்சர் திரு. ராஜ்நாராயண் உட்பட பல எதிர்க்கட்சித் தலைவர்கள் இப்பேரணியில் உரையாற்றினர். (இ)

விசேட வெகுமதி

பிறிக்ஸ் அன்ட் ஸ்ட்ராட்டன் இயந்திரத்துடன் ஒரு பம்பைக் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு விவசாயிக்கும் 50/- ரூபா பெறுமதியுள்ள விசேட வெகுமதி உரிமைச் சீட்டு ஒன்றை வழங்க முன்வந்துள்ளோம். இந்த உரிமைச் சீட்டைக் கொண்டு, விவசாயிகள் தங்களின் அபிமானமுள்ள ஹேக்கெம் விவசாய இரசாயனப் பொருட்களை ஹேக்கெம் வியாபாரிகளிடம் கொள்வனவு செய்யலாம்.

இயந்திரம் வாங்கிய பற்றுச்சீட்டையும் உதிரிப்பாகப் புத்தகத்தையும் எமக்கு அனுப்பினால் போதும். உடனடியாக நாம் அந்த பற்றுச் சீட்டையும் உதிரிப்பாகப் பதிவேட்டுப் புத்தகத்தையும் சேர்த்து விசேட வெகுமதி உரிமைச் சீட்டொன்றை உங்களுக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைப்போம்.

இப்பரிசுத்திட்டம் 15. 11. 79 இலிருந்து 31. 3. 80 வரையிலும் நடைமுறையிலிருக்கும்.

விபரங்களுக்குத் தொடர்பு கொள்க : பொறியியல் விற்பனை, பராமரிப்புப் பகுதி.

BRIGGS & STRATTON

ஹேலீஸ் லிமிட்டெட்
25, பொஸ்டர் ஒழுங்கை கொழும்பு - 10.
தொலைபேசி: 96331 - 6.

Mel Ads

பம்பு வியாபாரிகளுக்கும் விசேட சன்மானம்!
உங்களால் விற்பனை செய்யப்படும் பம்புகளுக்கு நாம் வழங்கும்
ஒவ்வொரு 25 விசேட வெகுமதி உரிமைச் சீட்டுகளுக்கும்
உங்களுக்கு ரூபா 500/- சன்மானம்!

ஆப்கான் நெருக்கடி:

## வல்லரசுப் போட்டியை அனுமதிக்க முடியாது

நியூயோர்க்கில் இந்திய வெளியுறவு அமைச்சர்

நியூயோர்க், மார்ச் 12
ஆப்கானிஸ்தான் நெருக்கடியினால் வல்லரசுப்போட்டி வளர அனுமதிக்கக்கூடாது. இவ்வாறு இந்தியவெளிவிவகார அமைச்சர் திரு. பி. வி. நரசிம்மராவ் தெரிவித்தார்.

நியூயோர்க்கில் நடைபெற்ற இந்தியமக்கள் கலந்துகொண்ட கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

இந்தியாவின் வடகிழக்கு எல்லையில் இந்திய பாதுகாப்புக்கு ஏற்பட்ட மிரட்டல்இன்னமும் முற்றுமுழுதாகத் தீர்க்கப்படவில்லை என்றும் இது தீர்க்கமுடியாத பிரச்னை அல்ல என்றும் திரு. நரசிம்மராவ் கூறினர். [இ]

## ஒலிம்பிக் பகிஷ்கரிப்பு: நீக்ரோ ஏடு கண்டனம்

நியூயோர்க் மார்ச். 12
"ஒலிம்பிக் போட்டியை பகிஷ்கரிப்பது என்று நாம் முடிவு செய்தால் நாம்ஏதோ நீதி நெறிவழுவா உன்னத லட்சியங்களின் பாதுகாவலர் என்று உலகம் நம்பிவிடப் போவதில்லை. இது உலக ஏற்பாட்டை மாற்றிவிடப் போவதுமில்லை" என்று பிரபல நீக்ரோ ஏடான 'அஃப்ரோ-அமெரிக்கா' எழுதியுள்ளது.

"அமெரிக்கர்களை ஈரானியக் கைதிகளாக பிடித்து வைத்திருப்பது, விசை நெருக்கடி, மற்றும் கஷ்ட நிஷ்டூரங்களுக்கு மூன்றும் உலகை எமது பத்திரிகைகள் திரட்டுவதில் பிரயோசனமில்லை. அதே போல சோவியத் யூனியனின் ஆப்கான் நடவடிக்கைகள், பந்தோபஸ்தை அச்சுத்துறுவதாக ஈரானோ மத்திய-கிழக்கு நாடுகளோ நினைக்கவில்லை. ஆப்கான் எண்ணெயை அமெரிக்கா வாங்கவில்லை. ஆகவே ஆத்திரப்பட்டுக் கொள்வதில் அர்த்த மில்லை. ஒலிம்பிக் பகிஷ்கரிப்பு, அமெரிக்க வரலாற்றுக்கும் நாம் இங்கு கூறுவதற்கும் மாறானதாகும். முன்னர் ஒரு ஒலிம்பிக் போட்டியின்போது இரண்டு நீக்ரோ வீரர்கள் பற்றி "ஒலிம்பிக்கும் அரசியலுக்கு சம்பந்தமில்லை" என்றார்கள்-அமெரிக்காவில் ஆனால் ஒலிம்பிக் பகிஷ்கரிப்பு பற்றி பேசும் அன்று கண்டித்துவிட்டுஇன்று அதைச் சர்வதேச ரீதியாக அமெரிக்காவே செய்வது சரிதானா? காட்டரின் பகிஷ்கரிப்பு பிரகடனத்துக்கும், தார்மீக நிலைப்பாட்டுக்கும் சம்பந்தமில்லை; சட்டரீதியானதுமல்ல" என்று நீக்ரோ ஏடான 'அஃப்ரோ அமெரிக்கா' எழுதியுள்ளது.

## 6 பேர் பலி!

ஆக்ரா, மார்ச், 12
வீதியில் சென்ற திருமண ஊர்வலத்தை 'பால்கனி'யில் நின்றுபார்த்துக் கொண்டிருந்த 2 பெண், 3 சிறுவர் உட்பட 6 பேர் பால்கனி திடீரென இடிந்து விழுந்ததால் ஸ்தலத்திலேயே மாண்டனர். 11 பேர் காயமுற்றனர்.

சகன்ச் பகுதியிலுள்ள கலேகான் என்ற இடத்தில் இந்த விபத்துநேரிட்டது. காயமுற்றவர்களில் 10 பேர் சிறுவர்கள். (வெ)

## குற்றச்சாட்டை தாக்கல்செய்ய 18-ம் திகதிவரை அவகாசம்

(மாவிட்டபுரம்)
பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பாகக் கைதாகி றிமாண்டிலிருந்துவரும் அளவெட்டியைச் சேர்ந்த சந்தேகநபரான சரவணமுத்து சற்குணசிங்கம் மீது பொலிசார் சுமத்தும் குற்றச்சாட்டுக்களையும், அதற்கான சாட்சிகள் மற்றும் ஆதாரங்களையும் இம் மாதம் 18ம் திகதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய பொலிசார் தவறினுல் இந்நபரை விடுதலை செய்வதாக மல்லாகம் நீதிபதி அறிவித்தார்.

வடபிராந்தியத்தில் இடம்பெற்ற பல்வேறுகுற்றச் செயல்கள் தொடர்பாக சங்கானைப் பொலிசாரால் கைது செய்யப்பட்டு றிமாண்டிலிருந்துவரும் மேற்படி சந்தேகநபர், கடந்த தவணை மல்லாம் நீதிபதிமுன் மீண்டும் ஆஜர் செய்யப்பட்டபோது அவர்சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர்.ஜே. செல்வரத்தினம் மேற்படி நபர் 3-9-77 ல் இருந்து அநியாயமாக றிமாண்டில் வைக்கப்பட்டிருப்பதாக நீதிபதியிடம் சுட்டிக்காட்டினுர்.

இதனையடுத்து நீதிபதி திரு. எஸ். இராஜசிங்கம் மேற்படி நபர் குறித்து பொலிசாரின் பதிவேடுகள் யாவற்றையும் இம்மாதம் 11ம்திகதி தம் முன் சமர்ப்பிக்குமாறும் இவரைக் கைது செய்த முன்னாள் சங்கானை பொலிஸ் இன்ஸ்பெக்டரும், தற்போது மொறட்டுவையில் கடமை புரிபவருமான இன்ஸ்பெக்டர் மிஸ்கினை அன்று நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் உத்தரவிட்டிருந்தார்.

இதற்கிணங்க 11ம் திகதி இந்நபர் மீண்டும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது, நீதிபதி சங்கானைப் பொலிஸ் கான்டபிள், சண்முகநாதனிடம் சந்தேக நபர் குறித்த பதிவேடுகளைக் கோரியதுடன், இன்ஸ்பெக்டரும் வந்துள்ளாரா என்று வினவினுர்.

அதற்குப் பதிலளித்த கான்ஸ்டபிள், இன்ஸ்பெக்டர் இன்று வரமுடியாதிருப்பதாக அறிவித்துள்ளதாகவும் சந்தேக நபர் தொடர்பான பதிவேடுகள் சன்சோனிக் கமிஷனுக்கு அனுப்பப்பட்டிருந்ததாகவும் அது இன்னமும் திரும்பக்கிடைக்கவில்லையெனவும் தெரிவித்தார்.

இதனையடுத்து நீதிபதி இம் மாதம் 18ம் திகத இச் சந்தேக நபர் மீதான குற்றச் சாட்டுகளையும் அதற்கு ஆதாரமான சட்சிகளையும் மற்றும் விபரங்களையும் பொலிசார் சமர்ப்பிக்க வேண்டுமெனவும்அவ்வாறு சமர்ப்பிக்க பொலிசார் தவறினுல் இவரை விடுதலை செய்வதாகவும் தெரிவித்தார்.

மேற்படி சந்தேகநபர் அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு றிமாண்டில் இருந்தாலும் இன்று அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டு விட்டது என்றும் நீதிபதி குறிப்பிட்டார்.

மேற்படி சந்தேகசபர் பல்வேறு குற்றச்செயல்கள் தொடர்பாக அடையாள அணிவகுப்புக்குட் படுத்தப்பட்டபோதும் எதிலும் அடையாளம் காணப்படாமல் இறுதியில் சிகரட் வான் கொள்ளை, காரக் கொள்ளை, துப்பாக்கி வைத்திருந்தது ஆகியன தொடர்பாக றிமாண்டில் வைக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி—பத்மினி
பேசும்தெய்வம்
(புத்தம் புதிய பிரதி)

நாகம்ஸ் (சுன்னாகம்)
Daily 4-45, 7-00 10-00
CARRY ON LOVING
[Color]

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சஞ்சீர் (ஹிந்தி) SANJEER

ஸ்டோ (யாழ். நகர்) Daily 10-30, 2-15, 4-45, 7-15 & 9-30 போன்: 7698
ARABIAN ADVENTURE
(Color)

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-விஜயா-சந்திரமோஹன்
கவிதா நடித்த
ஜெனரல் சக்கரவர்த்தி
(ஈஸ்மன்ட் கலர்)

ராணி (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
இல்லறம் இன்பமாக விளங்க "இருவர் உள்ளம்"
இணையவேண்டிய அவசியத்தை விளக்கும்
இணையற்ற குடும்பச் சித்திரம்
சிவாஜி கணேசன்-சரோஜாதேவி-எம்.ஆர். ராதா
பாலாஜி-ரங்கராவ் இன்னும் பலர் நடித்த
இருவர் உள்ளம்
(புதிய பிரதி)
திரைக்கதை வசனம்: கலைஞர் கருணாநிதி

SRIDHAR JAFFNA
Daily 5 Shows—10-30 a.m. 2-30, 4-45, 7-00 & 9-30 p.m.
ANTHONY QUINN in
THE DON IS DEAD
(Adults Only)
(திகிலூட்டும் சண்டைகள் நிறைந்த படம்)
From 15-3-80 That Man Bolt
(Karate Pilm)

REGAL JAFFNA. Last Few Days
Phone: 360
Daily at 2-00, 4-30, 7-00 & 9-30 p.m. only
"THE FLESH AND BLOOD SHOW"
(கண்டிப்பாக வயது வந்தவர் மட்டும்)
STRICTL FOR ADULTS

வின்ஸர் 3வது ஜனத்திரள் வாரம்! (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, பி. ப. 2-30, 6-15, இரவு 9
நாகேஷ்-முத்துராமன்-சௌகார் ஜானகி
"எதிர் நீச்சல்" (புதிய பிரதி)
குறிப்பிட்ட தினங்கள் மட்டும்

மனோஹரா A யாழ்ப்பாணம்
காட்சிகள்
முத்துராமன் - ஜெய்சித்ரா - ஸ்ரீகாந்த்
இன்ஸ்பெக்டர் மனைவி

SANTHI JAFFNA Phone: 7642
Daily 5 Shows
2nd Crowded and Last Week!
TERENCE HILL...BUD SPENCER — in
WATCH OUT WE'RE MAD!
Color — Action — Comedy
முழுக்குடும்பமும் பார்த்து மகிழ வேண்டிய
குலுங்கக் குலுங்கச் சிரிக்கவைக்கும் சிரிய சித்திரம்.
SPECIAL SCHOOLS SHOWS Contact Manager

# இன்றைய பலன்

**மாசி மாதம் 30ம் திகதி**

**13-3-1980 வியாழக்கிழமை**

மேடம்: தருமகாரியங்களில் தாராளமாக ஈடுபடுவீர்கள், சுற்றுடலில் திருப்பங்கள் ஏற்படும். புண்ணிய ஸ்தலம் ஒன்றுக்கும் யாத்திரை மேற்கொள்ளப்படலாம்.

இடபம்: சிலர் வாழ்க்கையில் அதிர்ஷ்டலாபமும் கிடைக்கும். தானியச் சிறப்புண்டு. தரமான நாள்.

மிதுனம்: கௌரவத்தை பாதிக்கக் கூடிய சம்பவம் இடம்பெறலாம். செலவினங்கள் அளவுக்கு மிஞ்சியதாகவே யிருக்கும். தொழிலிலும் மந்தநிலை காணும்.

கடகம்: காதலர்களுக்கு கனகுஷியான தினம். களஸ்திரப் பேச்சும் இடம்பெறலாம். தொழில் சீர்பெறும் நன்னாள்.

சிங்கம்: தூரதேச வாசம் உங்களை துயரத்தில்ஆழ்த்தும். ஆயுதங்களுடன் பழகுபவர் அவதானம் வேண்டும். பிரயாணத்தைப் பின்போடவும்.

கன்னி: பிதாவழிச் சுகமுண்டு. தொழிலிலும் விருத்தியுண்டு. குடும்பத்திலும் மகிழ்ச்சி தென்படும்.

துலாம்: சிலர் வாழ்க்கையில் திடீரென மாற்றங்கள் உருவாகும். மனை மாளிகைச் சிதப்புண்டு மகத்தான வாழ்வுமுண்டு.

விருச்சிகம்: பணவிடயத்தில் முன்னேற்றமுண்டு பெரியோர் ஆதரவுண்டு. புண்ணிய விருப்புமுண்டு.

தனுசு: நம்பிக்கை மோசடி நடக்கும், செலவுகளை கட்டுப்படுத்திக் கொள்ளவும். சிலருக்கு நூதன ரோகமும் தென்படலாம்.

மகரம்: எண்ணியதில் தடைகள் தோன்றும். தனதானிய நஷ்டமுண்டு. கடமை புரியுமிடத்தில் அவதானம் வேண்டும்.

கும்பம்: நல்லதைச் செய்வீர்கள். நலன் பெருகும். உறவினர் சகாயமுண்டு, தொழில் துறைகளிலும் வெற்றியுமுண்டு.

மீனம்: அரச பயத்திற்கு இடமுண்டு. சகோதர கவலையுண்டு. குடும்பப் பிணியும் தலைதூக்கலாம்.

சோதிடக்கலாநிதி
**திருமலை**
**க. வேலுப்பிள்ளை**

## சாம்பியனானது

(மாவிட்டபுரம்)

வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு 14 வது வருடாந்த விளையாட்டு விழாவையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் காங்கேசன்துறை பிறண்ட்ஸ் கழகம் அதிக புள்ளிகளைப் பெற்றுச் சாம்பியன் கேடயத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

வலிவடக்குப் பகுதியைச் சேர்ந்த விளையாட்டுக் கழகங்களிடையே வருடாவருடம் நடாத்தப்படும் இப்போட்டிகள் இம்முறையும் காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை திறந்தவெளி மைதானத்தில் இரு தினங்களாக நடைபெற்றன. இதில் காங்கேசன்துறை பிறண்ட்ஸ் கழகம் 89 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தையும் தையிட்டி ஸ்டார் விளையாட்டுக்கழகம் 88 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும் மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக் கழகம் 60 புள்ளிகளைப் பெற்று மூன்றும் இடத்தையும் பெற்றன. (இ)

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
விஜயகுமார்-ஜெயசித்ரா
தாயில்லாக் குழந்தை

# புதுவருட விளையாட்டு விழா

(புலோலி)

பருத்தித்துறை பொலிஸ் பகுதியில், பொலிஸ்-பொதுமக்கள் நல்லுறவுச் செயற்குழு நடாத்தும் தமிழ்-சிங்கள புதுவருட விளையாட்டு விழா, அடுத்தமாதம் 13ம் திகதி நடைபெறவிருக்கிறது.

பொலிஸ்- பொதுமக்கள் நல்லுறவைப் பலப்படுத்தும் நோக்குடன் பொலிஸ் திணைக்கள அனுசரணையுடன் நடாத்தப்படவுள்ள இந்தப் புதுவருட விளையாட்டு விழாவில் பங்குகொள்ள விரும்பும் பருத்தித்துறைப் பொலிஸ் பகுதிக்குட்பட்ட தனிநபர்களும், விளையாட்டுக் கழகங்களும் இம்மாதம் 21ம் திகதிக்கு முன்னர் அவ்வப்பகுதி கிராம சேவை அலுவலர்களுக்கு விண்ணப்பிக்க வேண்டுமென்றும் பாடசாலைமாணவர்களுக்கான போட்டி விண்ணப்பங்கள் பொலிஸ்.பொதுமக்கள் நல்லுறவுச் செயற்குழுவினால் பாடசாலை அதிபர்களுக்கு நேரடியாக அனுப்பிவைக்கப்பட்டுள்தாகவும் பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. சந்திரகுணரத்தின தெரிவித்தார்.

கரப்பந்தாட்டப் போட்டி (ஓவர்கேம்), கயிறிழுத்தல்ப் போட்டி, ஆண்கள் பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டி, குண்டெறிதல், தலையணை அடிப் போட்டி, வயது முதிர்ந்தோர் (60 வயதிற்கு மேற்பட்ட)களுக்கான ஓட்டப் போட்டி, பாடசாலை மாணவ, மாணவிகளுக்கான போட்டிகள், விநோத உடைய லங்காரப் போட்டி என்பன இந்த விளையாட்டுவிழாவில் இடம் பெறுகின்றன.

## புனித சூசையப்பர் வருடாந்த உற்சவம்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை புனித. சூசையப்பர் கோவில் வருடாந்த உற்சவம் இம்மாதம் 19ம் திகதி ஆரம்பித்து 23 ம் திகதி காலை திருநாட்பூசையுடன் முடிவடையும். தினம் இரவு 6 - 00 மணிக்கு ஆராதனையும் 22ம் திகதி மாலை 5-30 மணிக்குத் திருச்சொரூப பவனியின் பின் இரவு ஆராதனையும் நடைபெறும்.

## யாழ். பல்கலைக்கழகம் வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் இலங்கைக் கடற்படைப் பிரிவினருக்கும் பல்கலைக்கழக மாணவர்கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற போட்டியில் டேபிள்டெனிஸ்யாழ்.பல்கலைக் கழகக்கோஷ்டி50 புள்ளிகளால் வெற்றிபெற்றது. பல்கலைக்கத்தின் கோஷ்டிக்கு திரு. எஸ். போல்ராஜ் சூசை தலைமை தாங்கினார். (நா-கு)

......

## புளட்ஸ் கழகம் வெற்றி

(யாழ்ப்பாணம்)

பாஷையூர் ஜூப்பிறற்ஸ் கழகத்தினர், சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அனுசரணையடன் ''ஜூப்பிற்றஸ்'' சுழல் கேடயத்திற்காக நடாத்திய உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் 'புளட்ஸ்' கழகம் வெற்றியீட்டியது.

ஜூப்பிற்றஸ் கழகத்தினரின் சுழல் கேடயத்திற்காக நடாத்தப்பட்ட 7பேர் கொண்ட இச் சுற்றுப்போட்டியின் இறுதியில் 'புளட்ஸ்' கழகம் 'ஜிங்யாங் பிங்' கழகத்தினரை 2 - 0 கோல்களால் வெற்றியீட்டியது. இப்போட்டியின் போது திரு. ஏ. ஜி. இராஜசூரியர் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார். திரு ஏ. கிலிபேட் நடுவராகக் கடமையாற்றினார்.

## வலி. தென்மேற்கு விளையாட்டுப்போட்டி

(பண்டத்தரிப்பு)

வலி. தென் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு வருடாந்த விளையாட்டுப்போட்டி இம் மாதம் 29ம் 30ம் திகதிகளில் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம் ஆகிய போட்டிகள் உட்படப் பல்வேறு போட்டிகள் இதில் இடம்பெறும். இதற்கான ஒழுங்குகளை வலி. தென் மேற்குப் பிரிவு விளையாட்டு உத்தியோகத்தர் திரு. எஸ். கந்தசாமி செய்து வருகின்றார். (அ)

## புதிய நிர்வாகிகள்

(கொழும்பு)

கொழும்புப் பல்கலைக்கழகச் சுதேச வைத்திய நிறுவகத்தின் இந்து மாமன்ற நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

காப்பாளர்கள்: பேராசிரியர் விஜயசுந்தரா (துணைவேந்தர்), கலாநிதி திசநாயக்கா (அத்தியட்சகர்), கலாநிதி ஸ்ரீகாந்தா அருணாசலம் (சித்த பீடத் தலைவர்), கலாநிதி எஸ். பவானி (விரிவுரையாளர்).

தலைவர்: செல்வா திரவியராசா, துணைத் தலைவர்: சோம. சபாநாதன், செயலாளர்: எஸ். கே. சரவணமுத்து. துணைச் செயலாளர்: பி. பாலசுப்பிரமணியம், பொருளாளர்: டாக்டர் எஸ். திருநாவுக்கரசு, இணை பொருளாளர்கள்: செல்வி சியாயளநாயகி, கந்தையா, எஸ். சிவராஜன், இணைக் கணக்குப் பரிசோதகர்கள்: செல்வி செந்திரு கந்தையா, செல்வி சிவா சிவப்பிரகாசம், இதழாசிரியர்: ஸ்ரீலதா திருஞானசம்பந்தர், நிர்வாகக் குழு உறுப்பினர்களாக ஐந்து பேர் தெரிவுசெய்யப்பட்டனர். (கு

......

## விசாரணை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி பல நோக்கு கூட்டுறவு சங்க கொள்ளை வழக்கு நோற்று யாழ். நீதவான் திரு. ரி. யோகநாதன் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டு ஒத்திவைக்கப்பட்டது.

இவ்வழக்கில் திருநெல்வேலி ப. நோ. கூ.சங்கத்தின் மனேஜரிடமிருந்து 127 ரூபா 68 சதத்தை கொள்ளையடித்ததாக சு. ஜெயந்திரன் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிசார்பில் சட்டத்தரணிகனகசபாபதி ஆஜரானார்.

எதிரியை இம் மாதம் 25ம் திகதிவரை றிமாண்டில் வைக்க உத்தரவிட்ட நீதவான் விசாரணையை ஒத்திவைத்தார். (க)

## பொதுக் கூட்டம்

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் பஸ் பிரயாணிகள் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இம்மாதம் 15ம் திகதி சனிக்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (கு)

## நீர்விநியோகம் சீராகும்

(உடுப்பிட்டி)

கரவெட்டி அத்துளு குழாய் நீர்விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் குழாய் நீர் விநியோகம் அடுத்த வாரம் முதல் சீரான முறையில் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது இங்குள்ள இயந்திரம் ஒன்று பழுதடைந்திருப்பதால் குழாய் நீர் வழங்குவதில் கட்டுப்பாடு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமிட்டோமோ
டயர், ரீயூப்புகள்
வெள்ளை வர்ணம் பூசப்பட்டது.
5 60 x 13 ஒப்பல், மொறிஸ்-மறிஞ
5·90 x 13 | ஒப்பல், மொறிஸ்மறிஞ,
6·50 x 13 | கொன்சல், கோல்டன
7 25 x 13 பென்ஸ், J2 வான்
5·20 x 14 மொறிஸ்மயினர், பியட்
5·90 x 14 A/55, A/60, மொறிஸ் ஒக்ஸ்போர்ட்
6·40 x 14 லேலன்ட் சேபா வான் VW வான்
நாபன்ஸ் ரேட்ஸ்
யாழ்ப்பாணம்.

ஈழநாடு The EELANAADU 50 சதம்

## மேலும் ஒரு முன்னாள் அமைச்சர் ராஜினமா!

(சென்னை)
அ. தி. மு. அரசில் சட்ட அமைச்சராகவிருந்த, திரு. நாராயணசாமி முதலியார் தமது மேலவைஉறுப்பினர் பதவியை ராஜினமாச் செய்துள்ளார்.

திரு. நாராயணசாமி அ. தி. மு. கழகத்திலிருந்தும் விலகிவிட்டதாக அறிவித்துள்ளார்.

இதுவரை 5 முன்னாள் அமைச்சர்கள் அ. தி. மு. கழகத்திலிருந்து விலகிவிட்டார்கள்.

SUMITOMO
TYRES & TUBES
WHITE SIDE WALL
5.60 x 15 A/50, V/W
5.90 x 15 403, 404
165 x 14 504
165 x 15 404, 403
நாபன்ஸ் ரேட்ஸ்
சேகரம் பில்டிங்,
74 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 693

# 'பிஸ்கட்' எடுத்துச்செல்ல பஸ் பாவிக்கப்பட்டதாம்!

## சபைத் தலைவருக்குப்புகார்

(யாழ்ப்பாணம்)
வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் சாலையைச் சேர்ந்த ஒரு பஸ் வண்டி, பிஸ்கட்டுகள் எடுத்துச் செல்ல பயன்படுத்தப் பட்டதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பிரதேச அலுவலகத்தினதும், வடக்கு வட்டாரஅலுவலகங்களினதும் இரண்டாம் தொகுதி ஊழியர் மன்றத்தின் தலைவர் திரு. பொ. நல்லதம்பி வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் தலைவர் திரு. டட்லி குணசேகராவுக்கு அனுப்பிவைத்துள்ள புகார்க் கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது:

"வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் சாலை சாரதி பயிற்சிப் பகுதியின் பஸ்வண்டி ஒன்று அதே சாலையின் களஞ்சியப்பிரிவில் கடமையாற்றும் ஊழியர் ஒருவரின் தனிப்பட்ட பாவிப்பிற்கு உபயோகித்துள்ளார். இந்த பஸ் வண்டியில் இருபாலையில் உள்ள ஒரு தனியார் பேக்கறிக்கு பிஸ்கட்டுக்கள் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. இவ்வாறான செயல்களால் போக்குவரத்துச் சபைத்தலைவரின் நல்ல திட்டங்களுக்கு பொது மக்களிடையேயும் பஸ் ஊழியர்களுக்கிடையேயும் ஆதரவு இல்லாமல் போய்விடும். ஆகவே இந்த பஸ்வண்டியை துஷ்பிரயோகம் செய்தவர்மீது கடும்நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகின்றேன் என்று திரு. நல்லதம்பி தெரிவித்துள்ளார்.

இதில் சம்பந்தப்பட்ட ஊழியர் தொழிற்சங்க மொன்றின் நிருவாகசபை உறுப்பினர் என்று கூறப்படுகிறது.

# "பயிற்சிக்குத் தெரிவாகியும் அனுமதி கிடைக்கவில்லை"

(யாழ்ப்பாணம்)
"இலங்கை பூராகவும் பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியர்களுக்கு பெரும்தட்டுப்பாடு நிலவுகிறது. இந்த நிலமையில் மலையகத்தில் ஒருதரமான ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையை நிறுவுமுன்னர் கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையை மூடுவதை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வன்மையாக எதிர்த்தது. இதையும் பொருட்படுத்தாமல் கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையை மூடிவிட்டார்கள். இப்போது இந்த ஆண்டு ஆசிரிய பயிற்சிக்குத் தெரிவு செய்யப் பட்டவர்களுக்கும், 79ம் ஆண்டு பண்டாரவளை ஆசிரியர் பயிற்சிக்கலாசாலைக்குத்தெரிவுசெய்யப்பட்டுபிராந்திய கல்விக் கந்தோர்களினால் விடுவிக்கப்படாத 25 ஆசிரியர்களுக்கும், இதுவரை பயிற்சிக்கான அழைப்புக்கிடைக்கவில்லை. இதனால் பாடசாலைகளும், ஆசிரியர்களின் பயிற்சிச் சேவையும் பாதிக்கப்படுகிறது'

இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்க பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் ஆசிரிய பயிற்சிக்குப் பொறுப்பாகவுள்ள வித்தியாதிபதிக்கு அனுப்பியுள்ள மகஜரில் கோரியுள்ளார்.

மேலும் காலம்தாழ்த்தாது ஆசிரிய பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களை மட்டக்களப்பு, கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு அனுப்பிவைக்குமாறும் அவர் ஆசிரிய பயிற்சிக்குப் பொறுப்பாகவுள்ள வித்தியாதிபதியை விநயத்துடன் கேட்டுள்ளார். (வெ)

# நல்லெண்ணம் வளர நாடு முன்னேறும்

(புலோலி)
நமது நாட்டில் தேசிய ஐக்கியம், இனங்களுக்கிடையேயான ஒற்றுமை, பரஸ்பர நல்லெண்ணம் என்பன வளர்ச்சியடையும்போதுதான் நாடு சகலதுறைகளிலும்அபிவிருத்தி பெற்று முன்னணியில் திகழ முடியும். இங்கு வாழும் சகல இனமக்களும் இலங்கைவாழ் மக்களே. இவர்களுக்குள் எது விதவேறுபாடும் இல்லை. இந்த எண்ணக்கரு இலங்கையில் வாழும் இலங்கைச் சமுதாயத்தினரான எங்கள் ஒவ்வொருவரிடையேயும் புதைந்திருக்கும்போது எமதுநாடு நிச்சயம் அபிவிருத்தியடையும் என்பதில் ஐயமில்லை.

இவ்வாறு கேகாலையில் இருந்து தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்குமுகமாக யாழ். மாவட்டத்திற்கு வருகை தந்த மாணவர்கள் ஆசிரியர்கள் பெற்றோர்கள், கல்விஅதிகாரிகள் ஆகியோரைக் கொண்ட நல்லெண்ணத் தூது கோஷ்டியினருக்கு வடமராட்சியில் அளிக்கப்பட்ட வரவேற்பில் உரையாற்றிய பிரதிக் கல்விமாஅதிபர் திரு. ஜோர்ஜ் மெண்டிஸ் குறிப்பிட்டார்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகர் தலைமையில் இவ்வரவேற்பு நடைபெற்றது.

இவ்விழாவில் தொடர்ந்து உரையாற்றிய பிரதிக் கல்விமாஅதிபர் திரு. ஜோர்ஜ் மெண்டிஸ் கூறியதாவது: சிங்கள-தமிழ் மக்கள் மொழியால் வேறுபட்டாலும் இரு இனங்களும் இலங்கையர் என்ற இனத்தால் ஒன்றுபட்டவர்கள். இவ்விரு இனங்களுக்கிடையேயும் ஒற்றுமையையும் பரிமாற்றங்களையும் வளர்த்து நட்புறவை ஏற்படுத்திக் கொள்ள நல்லெண்ணத்தூதுக் குழுக்கள் வழிவகுக்கும்.

எனவே தென்னிலங்கையில் இருந்து வடஇலங்கைக்கும் வடஇலங்கையில்இருந்து தென்னிலங்கைக்கும் நல்லெண்ணத் தூதுக்குழுக்கள் செல்லும்போது இருபகுதியினரும் ஒருவரை ஒருவர் புரிந்து பரிமாற்றங்களை ஏற்படுத்தி நட்புறவை வளர்த்துக் கொள்ள முடியும். இதன் மூலம் தேசிய ஒருமைப்பாடு மேம்பாடடையும். இன்றைய மாணவர்களே எமது நாட்டையும் எம்மையும் எதிர்காலத்தில்வழிநடத்திச் செல்ல வேண்டிய பொறுப்புடையவர்களாவர். எனவே மாணவர்கள் மத்தியில் சிறுபராயத்திலிருந்தே ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளுதல், பரஸ்பரம், சகோதரத்துவம், ஐக்கியம் தேசிய ஒருமைப்பாடு என்ற குணநிசயங்களை ஏற்படுத்த வேண்டும். இத்தகைய நல்லெண்ண விஜயங்கள் மாணவசமுதாயத்திற்கு முன்னோடியாக உள்ளன.

வடமாநிலக்கல்விப் பணிப்பாளர் திரு. மாணிக்கவாசகர் மாணவசமுதாயத்துக்கு இன்றியமையாததான இது போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவது மாணவ உலகிற்கு மாத்திரமன்றி கல்வியமைச்சுக்கும் பெருமை தேடித்தந்துள்ளது என்றார்.

வடபிரதேச இ. போ. ச. தலைவர் திரு. டட்லி குணசேகரா பேசுகையில் கூறியதாவது எமது நாடு மிகவும் சிறிய நாடான படியால் இங்குவாழும் சகல இனமக்களும் ஒற்றுமையாக வாழ வேண்டியது மிக முக்கியமாகும். வட- இலங்கையில் சிங்கள மக்களும் தென்னிலங்கையில் தமிழ்மக்களும் இணைந்து ஒற்றுமையுடன் சுதந்திரமாக வாழவேண்டும். நாட்டுமக்களின் ஒத்துழைப்புடன் நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற இலட்சியத்துடனே ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன தலைமையிலான அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. இதனடிப்படையிலேயே போக்குவரத்து வசதிகளைச் சீர்செய்து திறம்பட நடாத்துவதற்காகவே அரசாங்கம் என்னை வடபிரதேச இ. போ. ச. தலைவராக அனுப்பி வைத்துள்ளது. (க)

## சுதுமலையில் கலைவிழா

(யாழ்ப்பாணம்)
சுதுமலை இளம் விவசாயிகள் கழகத்தினர் இம்மாதம் 23ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கலைவிழாக் கொண்டாடவிருக்கின்றனர்.

சின்மய பாரதிவித்தியாசாலை மண்டபத்தில் மாவட்ட விவசாய விரிவாக்க உத்தியோகஸ்தர் திரு. நா. சிவமுத்துலிங்கம் தலைமையில் இக் கலைவிழா நடைபெறும். விழா ஏற்பாடு களைக்கழகச்செயலாளர் திரு. சா. சத்தியேந்திரா கவனித்து வருகிறார். (அ)

......

## யாழ்.நகரில்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]
செவ்வாய்க்கிழமை இருவர் தனக்கு அச்சைக்கிளை 350 ரூபாவுக்கு விற்று 50 ரூபா பணத்தைப் பெற்றுக்கொண்டு போனதாகவும் மீகுதிப்பணத்தைப்பெற இன்று புதன் கிழமை வருவதாகவும்கூறினர் எனத் தெரிவித்துள்ளார்.

இதைத்தொடர்ந்து கைதடியில் வைத்து சைக்கிளை விற்றவர்களில் ஒருவர் எனச் சந்தேகிக்கப்படும் குருநாகலைச் சேர்ந்த எஸ். எம். பாருக் என்பவரை இன்ஸ்பெக்டர் தலைமையில் சென்ற கோஷ்டியினர் கைதுசெய்தனர்.

இத் திருட்டுச் சம்பந்தமாக இன்னும் ஒருவர் பொலிசாரால் தேடப்பட்டுவருகிறார். (கொ)

## இளம் பெண் தற்கொலை

(பண்டத்தரிப்பு)
நீண்ட நாட்களாக வயிற்று வலி நோயினால் அவஸ்தைப்பட்டு வந்த 20 வயது இளம் பெண் ஒருவர் நஞ்சருந்தி தன்னுயிரை மாய்த்துக் கொண்ட பரிதாப சம்பவம் சித்தன்கேணியில் நிகழ்ந்துள்ளது.

சித்தன்கேணியைச் சேர்ந்த சின்னத்தம்பி செல்வலதா என்னும் மேற்படி இளம் பெண்ணின் மரணவிசாரணை யாழ். அரசினர் வைத்திய சாலையில் திடீர் மரணவிசாரணை அதிகாரி சட்டத்தரணி திரு. எஸ். அமிர்தலிங்கம் முன்னிலையில் நடைபெற்றது. காலஞ்சென்ற இளம் பெண்ணின் தந்தை சின்னத்தம்பி தாயார் திருமதி சின்னத்தம்பி செல்வமணி ஆகியோர் சாட்சியமளித்தனர். சாட்சிகளைச்சங்கானைப் பொலிசைச் சேர்ந்த கான்ஸ்டபிள் திரு. கே. எம். கருணபால ஆஜர் செய்தார். விசாரணை முடிவில் மரணவிசாரணை அதிகாரி தற்கொலை என்று தீர்ப்புவழங்கினர்.

## லண்டன்......

[1ம் பக்கத் தொடர்ச்சி]
சானியா, கானா, இந்தியா, ஸாம்பியா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளுடன் ஒருவராகக் கலந்துகொள்வார். இச்சுற்றுலாவிற் இவர்ஏகப் பிரதிநிதியாவார். என்பது குறிப்பிடத்தக்கது.

கோப்பாய்க் கிறிஸ்தவக் கல்லூரியில் முன்னாள் பிரதம பகுதி அதிபரும், வலி கிழக்கு முன்னேற்றச் சங்கங்களின் சமாசம், சனசமூக நிலையங்களின் சமாசம் ஆகியவற்றின் தலைவியும், நீர்வேலி மாதர் முன்னேற்றச் சங்கம், ஐக்கிய நாணய சங்கம் ஆகியவற்றின் தலைவியும் நீர்வேலி சமுதாய முன்னேற்றக் கழகத் துணைச் செயலாளரும் ஆகிய இவர் இலங்கை தேசிய மாதர் முன்னணியின் உபதலைவியுமாவார்.

## மரத்திலிருந்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
றுறை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசென்றோம். அங்கு அவர் மரணமானர்.

மாணிக்கராசா ரகுச்செல்வி, மாணிக்கராசா ராகுலன் ஆகியோரும் சட்சியமளித்தனர்.

மரணவிசாரணை அதிகாரி விபத்து மரணமெனத் தீர்ப்பளித்தார்.

கான்ஸ்டபிள் ஐயாத்துரை சாட்சியங்களை ஆஜர் செய்தார். (கொ)

## புத்தூர் கி. ச. மின்விஸ்தரிப்பு

(நெல்லியடி)
புத்தூர்க் கிராமசபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் சுமார் ஒரு லட்சத்து 17 ஆயிரம் ரூபா செலவில், மின்விஸ்தரிப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன. மாவட்ட அபிவிருத்தித்திட்டத்தின்கீழ் இவ்வேலைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

சிறுப்பிட்டி ப. நோ. கூ. சங்க ஒழுங்கை, குடியேற்றத் திட்ட ஒழுங்கை, ஆவரங்கால் வன்னியசிங்கம் வீதி, புத்தூர், வாதரவத்தை வீதி என்பனவற்றிலே இம்மின் விஸ்தரிப்பு வேலைகள் நடைபெறுகின்றன. (அ)

## காணவில்லை

கத்தரிப்பூ நிறக் கவுண் அணிந்த, கருமை நிறமான மெல்லிய, ஒற்றைப் பின்னல் உள்ளவரும், சுமார் 3' 6'' உயரமுமுள்ள செல்வராணி எனும் சிறுமியை (சுமார் 13 வயது) 12-3-80 புதன் காலையிலிருந்து காணவில்லை. இச்சிறுமி பற்றிய தகவல்களை இல. 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் தருபவர்கட்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
5212

இப் பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் மார்ச்மாதம் 13 ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QJ/5948/78 The Eelanaadu P. B. No.49, Telegram Eelanadu. Phone 389

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org